வாராந்த சஞ்சிகை

ஓகஸ்ட் 13 - 19/2014

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



# கண்ணுக்குத் தெரியாத வலையும் போரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ நிஹாலே

தொடர் 07

# சமரின் மறுபெயர்...

மிகப்பல வருடங்களாக தலைவர் பிரபாகரனுடன் நெருக்கமாக இருந்த சொர்ணம், யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர் அவரை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து சென்றார். அதன் பின்னான காலகட்டத்தில் எப்பொழுதாவது மிகச்சிறிய நாள்கள் ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பம் வாய்த்ததே தவிர, மற்றும்படி இருவரும் ஆளுக்கொரு திசையில் இருந்தனர்.

அதுவரையான காலகட்டத்தில் பிரபாகரனை நிழலாகத் தொடர்ந்ததால், பிரபாகரனது குடும்பத்துக்கும் சொர்ணத்துக்கும் எப்படியான உறவு இருந்தது என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் நடந்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின்னர், சொர்ணம் திருமலைக்கு அனுப்பப்பட்டு விட்டார். அந்த நாள்களில் பிரபாகரனது மூத்த புதல்வர் சாள்ஸ் அன்ரனிக்கு 10 வயதுதான். அவர் சொர்ணத்தை அடிக்கடி கேட்டிருக்க வேண்டும். அதற்கு குடும்பத்தினர் ஏதோ தற்காலிக சமாதானம் சொல்லியிருக்க வேண்டும்.

1996 இல், இம்ரான் பாண்டியன் படையணியின் நிகழ்வொன்று நடந்தது. அதற்கு பிரபாகரன் குடும்பத்தினருடன் வந்திருந்தார். அந்த நிகழ்வில் சொர்ணத்தைச் சந்திப்பேன் என சாள்ஸ் அன்ரனி நினைத்திருந்தார். ஆனால் எல்லாத் தளபதிகளும் வந்த நிகழ்வில் சொர்ணம் மட்டும் இல்லை. "சொர்ணம் மாமாவைக் காணவில்லை, எங்கே அவர்?" என சாள்ஸ் அன்ரனி பகிரங்கமாகவே தந்தையாரிடம் கேட்டார்.

"அவருக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு இங்கே வரமாட்டார். அவர் கொஞ்சநாள் அங்கால இருக்கத்தான் வேணும்" என தலைவர் பதிலளித்தார்.

அதற்கடுத்த நான்கு வருடங்களில் ஈழப்போரியலின் மிகப்பெரிய பண்புமாற்றங்கள் எல்லாம் நிகழ்ந்தன. அதுவரை நினைத்தே பார்த்திருக்காத பெரும் போர்க்களங்கள் எல்லாம் திறந்தன. இந்தச் சமயத்தில்தான் விடுதலைப் புலிகள் மிகப்பெரிய காவலரண் வரிசையை அமைத்தார்கள். பலநூறு கிலோமீற்றர்கள் நீளத்துக்கு மன்னார் கடற்கரையிலிருந்து, மறு அந்தத்தில் இருந்த மணலாற்றின் நாயாற்று கடற்கரைவரை தொடர் காவலரண் அமைத்து தெளிவான எல்லைக்கோடு வகுத்துப் போரிட்டார்கள். இருதரப்பும் டாங்கிகள், ஆட்லறிகள் கொண்டு மோதிக் கொண்டிருந்தன. அதாவது ஒரு மரபுப்போரின் அத்தனை அம்சங்களுடனுமான போர்.

இந்தச் சமயத்தில் சொர்ணம், திருகோணமலை காடுகளில் மறைந்திருந்து கெரில்லா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் இயக்கத்தில் இணைந்த காலப்பகுதில் எப்படியான போர் உத்திகளை பாவித்தாரோ, அதே உத்திகளுடனான ஒரு போர்க்களத்தில் வாழ்ந்தார். அது கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் நீடித்தது.

இந்த சமயத்தில் தமிழீழப் போர்க்களம் நினைத்துப் பார்க்க முடியாத மாற்றங்களை சந்தித்தது. இந்த மாற்றங்கள் எதிலும் சொர்ணத்தை பங்கு கொள்ள வைக்காமல், தொலைவில் இருந்து பார்க்க வைத்து காலம் ஒரு விசித்திரக் கதையெழுதியது. புதிய புதிய தளபதிகள் உருவானார்கள். சொர்ணத்தின் முன்பாக மூக்குச்சளி ஒழுகத் திரிந்தவர்கள் எல்லாம், சொர்ணம் திரும்பி வந்தபோது, அவருக்கு நிகராகக் களங்களை வழிநடத்திக் கொண்டிருந்தார்கள். இந்த மாற்றங்களில் அவர் பங்கு கொள்ளாததாலோ என்னவோ, மீண்டும் களமுனைக்குத் திரும்பியவரால் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

அதன் பின்னர், விடுதலைப்புலிகள் ஓயாத அலைகள் மூன்று களத்தை திறந்தார்கள். மிகப் பெரியவளங்களையும், ஆளணியையும், போரியல் உத்திகளையும் அந்தக்களம் புலிகளிடம் கோரியது. அவர்களும் சமாளித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் ஆயுதப் பஞ்சம் புலிகளிடம் இருக்கவில்லை. மிகப்பெரிய ஆளணிப் பஞ்சமும் ஏற்பட்டது. கிராமியப்படை, எல்லைப்படை என ஆள்களைத் திரட்டி சமாளித்து கொண்டிருந்தார்கள்.

இதே காலப்பகுதியில் இன்னொரு தட்டுப்பாடும் அவர்களிடம் ஏற்பட்டது. களத்தை வழிநடத்தும் கட்டளைத்தளபதியொருவரை புலிகள் தேடினார்கள். என்னதான் புதிய நட்சத்திரங்கள் தோன்றினாலும், முழுக்களங்களையும் வழிநடத்தும் திறமை மற்றும் பிரபாகரனின் நம்பிக்கைக்கு பாத்திரமான தன்மை என்பனவற்றை கொண்டவரும், அதேசமயத்தில் மூத்த தளபதியாகவும் இருக்கும் ஒருவரை புலிகள் தேடினார்கள்.

இதுவரை அந்த பாத்திரத்தை வகித்து வந்த கருணா பற்றிய பல கசப்புக்கள் இயக்கத்துக்குள் உருவாகியிருந்தது. முறைதவறிய பாலியல் உறவுக்கு விடுதலைப்புலிகள் மன்னிப்புக்கிடமில்லாத மரணதண்டனை வழங்கினார்கள். எனினும், ஜெயசிக்குறு களம் தீவிரம் பெற்றபின்னர், ஆள்பஞ்சம் நிலவியதாலும், வருடக்கணக்கில் போராளிகள் காடுகளில் அடைந்து கிடப்பதாலும் கருணா பற்றிய பாலியல் மீறல் விவகாரத்தில் சற்று மேம்போக்கான கொள்கைகளை கடைப்பிடித்தார்கள். எனினும் நடைமுறைகள் ஒரு மரபாக உருவாவதைப் போல, திருமணத்துக்கு முந்தைய பாலியல் உறவென்பது தண்டனைக்குரிய அல்லது மனித நடத்தைக்கு முரணான விடயம் என்பதைப் போன்ற ஒரு மனப்பிரதிமை பெரும்பாலான போராளிகளிடம் படிந்திருந்தது. இந்த சூழலில் போராளிகளின் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஒரு தளபதியின் நடத்தை விடுதலைப்புலிகளை சங்கடப்படுத்தியது. அதற்காக அவரை தண்டனைக்குட்படுத்தவும் முடியவில்லை. ஜெயசிக்குறு களமுனையின் கட்ளைத்தளபதி அவர்தான். மற்ற மூத்ததளபதிகள் கள அனுபவமற்றிருந்தனர்.


பொட்டம்மான் விடுதலைப்புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் பிரபாகரனுடன் இணைந்து நடத்திக் கொண்டிருந்தார். அவர் களமுனையை வழிநடத்தும் நிலைக்கு அப்பால் சென்று விட்டார். மற்ற மூத்தவர்களில் ராயு, கடாபி, சூசை, பதுமன் போன்றவர்கள் தரைக்களமுனைச் செயற்பாடுகளில் ஈடுபாடுகொள்ளவில்லை. ஏதோவொரு துறைசார் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். பானு, தமிழ்ச்செல்வன், நடேசன் போன்றவர்கள் கட்டளைத்தளபதிகளாக தங்களை நிரூபிக்காதவர்கள்.

இப்பொழுதுதான் தீபன் புதிய நட்சத்திரமாக உருவாகியிருந்தார். எனினும், அவரிடம் உடனடியாக பொறுப்புக்களை ஒப்படைக்கும் மனநிலையில் பிரபாகரன் இருக்கவில்லை. எஞ்சியவர் சொர்ணம். அவர் கிழக்கில்.

ஒரு மனிதர் எவ்வளவுதான் அதிதீவிர திறமை கொண்டவர் எனினும், ஒழுக்கம், முன்னுதாரணம், அமைப்பு விசுவாசத்தில் சறுக்கினாலும் பிரபாகரன் அவருடன் சமாளித்துக் கொள்வதில்லை என்பதற்கு அந்த சமயத்தில் இரண்டு உதாரணங்கள் இருந்தன. ஒன்று கருணா. மற்றது பால்ராஜ்.இங்கு குறிப்பிட்ட இந்த மூத்தளபதிகள் பட்டியலில் பால்ராஜ் இருக்கவில்லை. அவர் இந்த சமயத்தில் ஒதுங்கியிருந்து விட்டு, மெதுமெதுவாக மீண்டும் அரங்குக்கு வரத் தொடங்கியிருந்தார். 1998இல் ஆனையிறவு மீது புலிகள் ஒ[illegible] தாக்குதல் நடத்தினார்கள். பெருமளவு ஆட்லறிகளை கைப்பற்றிய பின்னரும், அதனைப் பத்திரமாக கொண்டு வரும் பாதை கைப்பற்றப்படாததால் அவை அங்கேயே வெடிவைத்து தகர்க்கப்பட்டன. இந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை. அத்தோடு புற்றுநோயால் அவர் தாக்கப்பட்டிருந்தாலும் நீண்டகாலம் களமுனைக்குச் செல்லவில்லை..

ஆனையிறவுக்கு அப்பாலான களமுனைகளில் முதற்கட்ட மாற்றம் செய்ய தலைவர் பிரபாகரன் நினைத்தார். அந்தப் பகுதிகளில் பால்ராஜ் கட்டளை வழங்கினார். எனினும், அங்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சில இளநிலை கட்டளைத்தளபதிகள் குழப்பம் விளைவித்தனர். இதனால் கோபமடைந்த தலைவர் பிரபாகரன், கருணாவை அழைத்து கடுமையாகக் கடிந்து கொண்டதுடன், கிழக்கு அணியை கிழக்குக்கே அனுப்பி வைத்தார்.

மீண்டும் சொர்ணத்தை அழைத்தார் பிரபாகரன். யாழ்ப்பாணத்துக்கான சண்டையை வடக்கிலுள்ளவர்களே பிடிக்க வேண்டும் என்பதும் தலைவரின் நிலைப்பாடாக இருக்கலாம். அந்தச் சமயத்தில் வன்னியில் தங்கிய கிழக்கு படையணிகள் பின்தளப் பணிகளிலேயே ஈடுபட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வமும் இராணுவமயம் இராணுவமோ அரசமயம்

இலங்கை பாதுகாப்புத் துறை சார்பில் கடந்த ஜூலை தொடக்கத்தில் அனைத்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் (என்.ஜி.ஓ.) ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் என்.ஜி.ஓ.க்கள் தங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளை




உடனடியாக நிறுத்தும்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஜூலை 7ஆம் திகதியிட்ட அந்தக் கடிதத்தை, பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் என்.ஜி.ஓ.க்களுக்கான தேசிய செயலர் அனுப்பியுள்ளார். கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிரோத நடவடிக்கைகளின் பட்டியல் என்.ஜி.ஓ.க்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் பேரதிர்ச்சியாக உள்ளது.

**பத்திரிகையாளர் சந்திப்பு- சட்டவிரோதமா?**

என்.ஜி.ஓ.க்கள் சார்பில் பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தக் கூடாது. பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை, பயிற்சி முகாம்களுக்கு ஏற்பாடு செய்யக்கூடாது. பத்திரிகைச் செய்திக் குறிப்புகளை வெளியிடக் கூடாது என்று அந்தக் கடிதத்தில் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சட்டவிரோத நடவடிக்கைகள் என்று கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "சர்வாதிகார நாடுகளில்தான் இதுபோன்ற அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும். பாதுகாப்புத் துறை அனுப்பியுள்ள கடிதம் இலங்கை ஒரு சர்வாதிகார நாடு என்ற குற்றச்சாட்டை வலுப்படுத்துவதாக உள்ளது" என்று தெரிவித்துள்ளது.

முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த தலைவர் கரு ஜெயசூர்யா கூறியபோது, "இலங்கை அரசின் நடவடிக்கை பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுரிமை என்பவற்றின் மீது விழுந்த பேரிடி" என்று விமர்சித்துள்ளார்.

டிரான்ஸ்பாரன்ஸி இன்டர் நேஷனல் என்ற அமைப்பு சார்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நீர்கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இதனை சிலர் தடுத்து நிறுத்தி பத்திரிகையாளர்களை விரட்டியடித்தனர். இதே அமைப்பு இதற்கு முன்னர் தமிழ் பத்திரிகையாளருக்கான முகாமை நடத்திய போது இலங்கை இராணுவமே மூக்கை நுழைத்து தடுத்து நிறுத்தியது. இதனால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் பத்திரிகையாளர்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு எழுந்துள்ளது. இதுகுறித்து பயிற்சி முகாமை நடத்திய இதழியல் துறை மூத்த ஆசிரியர் ஒருவர் கூறியதாவது: புலனாய்வுச் செய்தி சேகரிப்பு சட்டவிரோதம் என்றும் அவ்வாறு செய்தி சேகரிக்க முயன்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் பத்திரிகையாளர்கள் மறைமுகமாக மிரட்டப்படுகிறார்கள். டிரான்ஸ்பாரன்ஸி இன்டர் நஷனல் சார்பில் அண்மையில் சிங்களப் பத்திரிகையாளர் களுக்கான பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. அப்போது இராணுவத் தரப்பில் இருந்தோ வேறு தரப்பில் இருந்தோ எவ்வித எதிர்ப்பும் எழவில்லை. ஆனால் தமிழ் பத்திரிகையாளர்களுக்கு மட்டும் அநீதி இழைக்கப்படுவதாக ஏன் என்று தெரியவில்லை. ஐ.நா. விசாரணைக் குழுவினருக்கு தமிழ் பத்திரிகையாளர்கள் தகவல்களை அளிக்கக்கூடும் என்று அரசு கருதுகிறது. அதன்காரணமாகவே இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுகின்றன என்றார்.

**டிரான்ஸ்பாரன்ஸி இன்டர் நேஷனல் என்ற அமைப்பு சார்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நீர்கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. இதனை சிலர் தடுத்து நிறுத்தி பத்திரிகையாளர்களை விரட்டியடித்தனர்.**

**எங்கும் எதிலும் ராணுவம்**

வடக்கு மாகாணத்தில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 5 ஆண்டுகளான பிறகும் அங்கு இராணுவம் வாபஸ் பெறப்படவில்லை. தொடர்ந்து இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு கொண்டே வருகிறார்கள். உயர் பாதுகாப்பு பகுதிகள் என்ற பெயரில் தமிழர்களின் பல லட்சம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தால் வளைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணம் முழுவதும் இராணுவமயமாக மாறியுள்ளது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஜி.ஏ.சந்திரஸ்ரீயை மீண்டும் ஆளுநராக நியமிக்கக் கூடாது, இராணுவம் சாராத ஒருவரை நியமிக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உரக்கக் குரல் எழுப்பியும் இலங்கை அரசின் செவிகளில் அது ஏறவே இல்லை. மீண்டும் அவரே ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ளார். அபிவிருத்தி, பொருளாதாரம் போன்ற துறைகளிலும் இராணுவத்தின் தலையீடு அதிகரித்துள்ளது. அதை நிரூபிக்கும் வகையில் உள்ளூராட்சி அபிவிருத்தி என்ற விடயம் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. வெளியுறவுத் துறையையும் இராணுவம் விட்டுவைக்கவில்லை.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல்கள் பலர், பல்வேறு நாடுகளின் தூதர்களாக நியமிக்கப் பட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' நாளிதழ் சுட்டிக் காட்டியுள்ளது. நாட்டின் கல்வித் துறையிலும் இராணுவம் வைத்ததுதான் சட்டம் என்று எக்னாமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி இதழில் 2013 இல் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதியாண்டிலும் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் ராணுவத்துக்கான ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வரவு செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் இராணுவத்துக்கு மட்டும் 20 சதவீதம் ஒதுக்கப்படுகிறது.

**புதுவகை சர்வாதிகாரம்**

பொதுவாக சர்வாதிகார நாடுகளில் ராணுவமே தலைமைப் பொறுப்பேற்று செயல்படும். இலங்கையைப் பொறுத்தவரை அனைத்து அரசுத் துறைகளிலும் இராணுவம் நீக்கமற நிறைந்திருந்தாலும் இன்றுவரை அரசின் கைப்பாவையாக மட்டுமே உள்ளது. இதுகுறித்து சட்டத்தரணிகள் கூட்டமைப்பு மற்றும் டிரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் தலைவர் ஜே.சி.வெலியமுனி கூறியபோது, "அரசின் அனைத்துத் துறைகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன, அதேநேரம் இராணுவம் இலங்கை அரசின் முழு கட்டுப் பாட்டின் கீழ் உள்ளது" என்றார்.

**சர்வதேச கண்காணிப்பு அதிகரிக்கும்**

30 ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போரில் விடுதலைப் புலிகளை இராணுவம் வீழ்த்தியதை நினைவுகூரும் 5ஆம் ஆண்டு வெற்றிவிழா மாத்தறையில் கடந்த மே மாதம் வெகு விமரிசையாக நடைபெற்றது. போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளான பிறகும் ராணுவம் தொடர்ந்து அதே வெற்றிக் களிப்பில் மிதந்து கொண்டிருக்கிறது. அதன் செயல்பாடுகளும் அப்படியே உள்ளன. போர்க் குற்றம் தொடர்பாக இலங்கை அரசுக்கு சர்வதேச அளவில் நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் அந்த நாட்டு அரசு இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து ஊக்குவித்தால் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பு மேலும் இறுகக் கூடும் என்று நடுநிலையாளர்கள் பகிரங்கமாக எச்சரித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை கலங்கடிக்கும் எபோலா

உலக நாடுகளை அச்சுறுத்தி கொண்டிருக்கும், எபோலா வைரஸ் என்ற உயிர்கொல்லி நோய், கடந்த ஆண்டு இறுதியில், மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் வசித்த, 2 வயது சிறுவனிடம் இருந்து தான், மற்றவர்களுக்கு பரவியதாக கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 1976இல், மேற்கு ஆபிரிக்க நாடான, காங்கோவில், எபோலா நதிக்கரையில் தோன்றி யதால், இந்த நோய்க்கு, எபோலா வைரஸ் என, பெயர் வைக்கப்பட்டது.இதன்பின், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில், குறிப்பிட்ட இடைவெளிகளில் இந்த நோயின் தாக்கம் தெரியும். இதில், ஏராளமானோர் செத்து மடிவர். இந்த நோயைக் குணமாக்குவதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்காத நிலையில், முன் எப்போதையும் விட, தற்போது, மிக தீவிரமாக இந்த நோய் தாக்கத் துவங்கியுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளின் எல்லையை கடந்துள்ளதாக கூறப்படும், இந்த எபோலா என்ற எமதர்மன், மற்ற நாடுகளின் பக்கமும், தன் கொலை வெறிப் பார்வையை திருப்பக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நோய்க்கான விஷ வித்து, கடந்தாண்டு இறுதியில், மேற்கு ஆப்ரிக்க நாடான, கினியாவில் உள்ள, குயிக்கேடோய் என்ற சிறிய நகரத்தில் ஊன்றப்பட்டது.இரண்டு லட்சம் பேர் வசிக்கும் இந்த நகரம், மற்ற ஆபிரிக்க நாடுகளான, சியாரா லியோன், லைபீரியா ஆகியவற்றின் எல்லையில்அமைந்து உள்ளது. இங்கு கூடும் வாரச்சந்தை, மிகவும் பிரபலம். இந்த சந்தையில் பொருட்கள் வாங்குவதற்காக, அண்டை நாடுகளில் இருந்து, ஏராளமானோர் வருவது வழக்கம்.

இந்த நிலையில், கடந்த டிசம்பரில், குயிக் கேடோய் நகரில் வசித்த, 2 வயது ஆண் குழந்தைக்கு, எபோலா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டது. அடுத்த சில நாள்களில், அந்த குழந்தைக்கு, கடுமையான காய்ச்சல், வாந்தி, வயிற்றுப் போக்கு ஆகியவை ஏற்பட்டன. டிசம்பர், 6ஆம் திகதி, நோய் பாதிப்பு அதிகமாகி அந்த குழந்தை இறந்தது. ஒரு வாரத்துக்கு பின், அந்த குழந்தை யின் தாயும், அதன்பின், குழந்தையின் பாட்டியும், இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தனர்.ஆனாலும், அந்த நகரத்தை சேர்ந்த சுகாதார அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும், எபோலா வைரஸ் தாக்கப்பட்டதால் தான், இவர்கள் இறந்தனர் என்ற விவரம் தெரியவில்லை. குழந்தையின் பாட்டியின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்த, மேலும் இரண்டு பேருக்கு, சில வாரங்களுக்கு பின், இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டு, அடுத்த சில நாள்களில் இறந்தனர். இவர்களுக்கு சிகிச்சை அளித்த சுகாதார ஊழியரும், மருத்துவரும் அடுத்தடுத்து; இந்த வைரஸ்



தாக்கப்பட்டு இறந்தனர்.

இதைத் தொடர்ந்து, அருகில் உள்ள நகரங்களில் வசித்த, இவர்களின் உறவினர்களுக்கும் இந்த நோய் பரவியது. மார்ச் மாத மத்தியில், ஒட்டு மொத்த கினியாவிலும், நோய் பாதிப்பு தெரிந்தபின் தான், எபோலா வைரஸ் வேகமாக பரவி வருவதை சுகாதார அதிகாரிகள் உணர்ந்தனர்.

அதற்குள், அருகில் உள்ள, சியாரா லியோன், லைபீரியா ஆகிய நாடுகளில் வசித்த பலருக்கு இந்த நோய் பரவி விட்டது. இந்த மூன்று நாடுகளுமே, மிகவும் ஏழ்மையான நாடுகள் என்பதாலும், மூன்று நாடுகளுக்கும் இடையே அதிகப் படியான மக்கள் போக்குவரத்து உள்ளதாலும், நோய் வேகமாக பரவியது.லைபீரியாவில், மார்ச், ஏப்ரல் மாதத்துக்கு பின், இந்த நோய் குறித்த அறிகுறி தெரியவில்லை. இதனால், எபோலா வைரஸ் இனி பரவ வாய்ப்பில்லை என பொதுமக்கள் நினைத்தனர். ஆனால், சில மாத இடைவெளிக்கு பின், முன்பை விட, மிக வேகமாக இந்த நோய், தற்போது பரவத் தொடங்கியுள்ளது. லைபீரியாவில் மட்டும், இதுவரை, 156 பேரின் உயிரை, இந்த நோய் காவு வாங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த நாடுகளான, கானா, நைஜீரியா, கேமரூன், கொங்கோ ஆகியவற்றிலும், இந்த நோயின் தாக்கம் தென்படத் தொடங்கியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 1,779 பேர், எபோலா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்களில், 961 பேர் இறந்துள்ளனர்.நைஜீரியாவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் வசிக்கும் அனைவருக்கும் இந்த நோயின் தாக்கம் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, இந்த நோயின் மையமாக, சியாரா லியோன் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு, இந்த நோய், வேகமாக பரவி வருவது, சர்வதேச நாடுகளிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது.

156 பேரின் உயிரை, இந்த நோய் காவு வாங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த நாடுகளான, கானா, நைஜீரியா, கேமரூன், காங்கோ ஆகியவற்றிலும், இந்த நோயின் தாக்கம் தென்படத் தொடங்கியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, 1,779 பேர், எபோலா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக, உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்களில், 961 பேர் இறந்துள்ளனர்.

சமீபத்தில், கினியாவிலிருந்து சென்னைக்கு வந்த, தேனி மாவட்டத்தை சேர்ந்த இளைஞருக்கு, இந்த நோயின் தாக்கம் இருப்பதாக வெளியான செய்தியாலும், டில்லி, மும்பை ஆகிய நகரங்களில், இந்த நோய் தாக்கத்துடன் சிலர் சிகிச்சை பெற்று வருவதாக வெளியான செய்தியாலும், இந்தியாவிலும் பீதி ஏற்பட்டுள்ளது.இதன்மூலம், மேற்கு ஆபிரிக்க நாடுகளை தாண்டி, மற்ற நாடுகளிலும், இந்த வைரஸ் கால் பதித்துள்ளது தெரியவந்துள்ளது.

## தனிமைப்படுத்துதல்...

எபோலா வைரஸ் தாக்கத்துக்கு ஆளானவர்களை, தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதன் மூலம், இந்த நோய், மேலும் பலருக்கு பரவாமல் கட்டுப்படுத்த முடியும் என, சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர். பெரும்பாலான, மேற்கு ஆபிரிக்க நாடுகளில், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை, தனி விடுதியில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுவது இல்லை.


## பிணங்களை தொடுவதால்...:

எபோலா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் இறுதிச் சடங்கில் பங்கேற்பவர்கள் மூலமாகவே, இந்த நோய் வேகமாக பரவுவதாக கூறப்படுகிறது. இறுதிச் சடங்குகளில் பங்கேற்பவர்கள், இறந்தவர்களின் உடல்களை தொடுவது தான், இதற்கு காரணம் என, கூறப்படுகிறது. எனவே,

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வசிக்கும் மக்கள், இந்த நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்யும் நடைமுறையை மாற்ற வேண்டும் என, சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா தேர்தலில் இரட்டை இலை




தமிழக மக்களினதும், இலங்கைத்தமிழ் மக்கள் மத்தியிலும் ஒரு நடிகராக மட்டுமன்றி பெரும் கொடை வள்ளலாகவும் அப்பழுக்கற்ற நேர்மையான அரசியல்வாதியாகவும் பெருமதிப்பை பெற்றவர் எம்.ஜி.ஆர் என அன்புடன் அழைக்கப்படும் தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் இராமச்சந்திரன். அவர் திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து வெளியேறித் தனிக்கட்சி அமைத்த போது அவர் அதற்கு தேர்ந்தெடுத்த சின்னம் தான் இரட்டை இலை. சுட்டு விரலையும் நடுவிரலையும் விரித்து காட்டும் போது வெற்றி என்பதற்கு அறிகுறியாக 'வி' என்ற ஆங்கில எழுத்து சுட்டப்படும். இது இரட்டை இலைக்கும் பொருத்தமாக அமைந்தது. இரட்டை இலையின் இராசியோ என்னவோ தமிழகத்தில் எந்த ஒரு தேர்தலிலும் எம்.ஜி.ஆர் தோல்வியடைந்ததில்லை. இன்று வரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமாக இரட்டை இலையே விளங்கி வருகிறது.



எதிர்வரும் ஊவா மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஊவா மாகாண முஸ்லிம் கவுன்சில் ஆகிய இணைந்து ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற அமைப்பின் ஊடாக இரட்டை இலைச் சின்னத்தில் களமிறங்கியுள்ளன.

இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தப்படாத ஒரு போர் தொடுக்கப்பட்டுள்ளது . அனுராதபுரம் தர்க்காவில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் , தகர்ப்புகள் முப்பதுக்கும் மேற்பட்ட மசூதிகளில் பகிரங்கமாகவே இடம்பெற்றுள்ளன. பள்ளிவாசலுக்குள் பன்றி இறைச்சியை வீசுதல் புனித குர்ஆனை வீதியில் தூக்கி வீசுதல், நோன்பு நாளில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்களை விரட்டி விட்டு பிரித் ஓதுதல் போன்ற முஸ்லிம் மத விரோத நடவடிக்கைகள் தாராளமாகவே இலங்கையில் இடம்பெற்று வருகின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் பள்ளிகளை அகற்றும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.அண்மையில் பேருவளை, அளுத்கம, தர்க்கா நகர் என ஆரம்பித்த முஸ்லிம் வர்த்தக மையங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தெஹிவளை, குருநாகல் எனப் பல இடங்களுக்கும் பரவிப் பேரழிவை ஏற்படுத்தின.முஸ்லிம் பெண்களின் பாரம்பரிய ஜிகாப் உடைக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. வாழைச் சேனையில் இரு பெண் அரச ஊழியர்களின் ஜிகாப் உடைகளை நடுவீதியில் வைத்து பலவந்தமாக களையச் சிலர் முற்பட்டனர்.அப்போது அவர்கள் ஓடிச் சென்று அரச காரியாலயம் ஒன்றுக்குள் புகுந்து தப்பிவிட்டனர். மட்டக்களப்பில் ஒரு பொலிஸ் அதிகாரி மோட்டார் சைக்கிளில் பின்புறத்தில் இருக்கும் பெண்கள் இரு பக்கமும் கால்களைப் போட்டுக் கொண்டு இருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டமையை நாம் மறந்து விட முடியாது. தற்சமயம் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய முஸ்லிம் பெண்கள் ஜிகாப் உடையுடன் தேர்தலில் வாக்களிக்க முடியாது எனக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு முஸ்லிம்களின் மதம், கலாசாரம், வர்த்தகம் எனப் பல்வேறு முனைகளிலும் அவர்களுக்கு எதிராக ஒரு போர் தொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக இலங்கை முஸ்லிம்களை சர்வதேச முஸ்லிம் தீவிரவாதத்துடன் இணைத்துக் குற்றம் சாட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. இப்படியான நடவடிக்கைகளின் பின்னால் சிங்களக் கடும் போக்கு சக்திகள், பொலிஸார், அரச அதிகாரிகள் என ஒரு வலைப்பின்னலில் இருப்பது தெளிவாகிறது. இதற்குப் பாதுகாப்பு அமைச்சின் ஆதரவு இருப்பதையும் மறுதலித்து விட முடியாது.

இப்படியான ஒரு நெருக்கடி மிக்க சூழலில் முஸ்லிம் தலைமைகள் மத்தியில் ஒரு ஐக்கியம் உருவாக வேண்டியது தவிர்க்க முடியாத தேவையாகும். தற்சயமம் மாகாணதேர்தலையொட்டி ஒரு தற்காலிக ஐக்கியம் உருவாகியுள்ளது.

ஆனால் இது தே[illegible] சில ஆசனங்களை பெறுவதற்கான ஐ[illegible]? அல்லது முஸ்லிம்களின் நலன்களின் அடிப்படையிலான உண்மையா, நிரந்தரமான ஐக்கியமா என்பது தான் இங்கு எழும் கேள்வியாகும்.

முதலில் இந்தக் கூட்டமைப்பின் பெயரான ஜனநாயக ஐக்கிய முன்னணி என்ற பெயரில் கூட முஸ்லிம் அடையாளம் இல்லை என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும். அடுத்து இதில் ஒரு முக்கிய பங்காளிக் கட்சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தனது பெயரில் உள்ள முஸ்லிம் என்ற பதத்தை மாற்றி விட்டு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என உருவெடுத்து விட்டது.

ஆனால் இவர்கள் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை காரசாரமாக விமர்சித்தே முஸ்லிம்களிடம் வாக்குக் கேட்கப் போகிறார்கள். அது மட்டுமன்றி அவர்கள் தேர்ந்தெடுத்த இரட்டை இலைச்சின்னம் மலையக மக்கள் மத்தியில் மயக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் ஒரு பகுதியினரின் வாக்குகளைப் பெறவும் வாய்ப்பு உண்டு. ஏனெனில் எம்.ஜி.ஆரை கடவுளாக நினைப்பவர்கள் மலையக மக்கள். இதனால் அவர்கள் இரட்டை இலையைக் கண்டவுடனேயே எம்.ஜி.ஆர் மீதான விசுவாசத்தில் இந்தக் கட்சிக்கு அதன் கொள்கைகள் என்னவென்று தெரியாவிட்டாலும் கூட வாக்களித்து குறிப்பிடத்தக்களவு வெற்றியை வழங்கும்.

இப்படி வெற்றிபெற்றாலும் இந்த கூட்டணியின் உறுப்பினர்கள் அடுத்து என்ன செய்யப் போகின்றனர்என்பது அடுத்து எழும் கேள்வி. ஏற்கனவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்பன அரசின் பங்காளிக் கட்சிகளாக மாறி விட்டன.முஸ்லிம் கவுன்சில் எப்போதுமே முஸ்லிம்களுக்கு அரசாங்கம் இழைக்கும் அநீதிகளை நியாயப்படுத்தி பூசி மெழுகுவதையே தன் கடமையாகக் கொண்ட அமைப்பு.

எனவே தேர்தலில் வெற்றி பெறும் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கே தமது ஆதரவை வழங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அப்படியானால் இந்த முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

முஸ்லிம்களுக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகள் காரணமாக அரசுக்கு எதிரான முஸ்லிம் மக்களின் உணர்வுகளை திசை திருப்பி எதிர்க்கட்சிகளுக்குப் போக விடாமல் தடுத்து , அவற்றை மீண்டும் அரசாங்கத்துக்கே பயன்படுத்துவதே இதன் உண்மையான நோக்கமாகும்.அதே வேளை இரட்டை இலைச் சின்னத்தைக் காட்டி மலையக மக்களை ஏமாற்றும் நோக்கமும் உண்டு.

இரட்டை இலைக்குள் தன்னுடைய உண்மையான நோக்கத்தையும், முகத்தையும் மறைத்துக் கொண்டு இந்தக் கூட்டணி வழமை போலவே மக்களின் தலையில் மிளகாய் அரைக்கப் போகிறது. அவ்வளவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

# ஊர் வாயை மூட முடியுமா?

ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து மனிதரைக் கடித்த கதையாக இலங்கை அரசின் கோபப் பார்வை இப்போது அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மீது விழுந்திருக்கிறது. இந்தக் கோபம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல.போர் நடக்கும் காலத்திலேயே புலிகளுக்கு அடுத்ததாக அரசுக்குப் பிடிக்காதவையாக இந்தத் தொண்டு நிறுவனங்களே இருந்தன.இதற்கு காரணம் இல்லாமலும் இல்லை.

போர் நடக்கும்போது அரச படைகள் தனியே புலிகளின் இலக்குகளை மட்டுமே தாக்குவதில்லை. மாறாக அப்பாவி மக்களே அரச படைகளின் தாக்குதலில் அதிகம் சிக்கி சேதங்களை அனுபவித்திருக்கிறார்கள். ஆனாலும் அப்பாவிகளுக்கும் புலிச்சாயம் பூசி கொல்லப்பட்டது புலிகளே என்று உலகெங்கும் தன் வீரத்தை அரசு பறைசாற்றி வந்தது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்குத் தான். இலங்கை அவ்வளவு கெட்டித்தனமானது அல்ல என்பதால் அதன் புளுகு எட்டு மணித்தியாலங்களுக்குக் கூட தாக்குப் பிடிப்பதில்லை. ஏனெனில் இலங்கையில் இருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போர்களின் போது அப்பாவிகளுக்கு ஏற்படும் இழப்புகளை துல்லியமான புள்ளிவிபரங்களோடு- உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரங்களோடு - சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தி வந்துள்ளன. இது இலங்கையின் முகத்தில் தொடர்ச்சியாக கரியைப் பூ▮ ØÁZ பஒரு பொய்கார அரசா கவே அடையாளப்படுத்தப்பட்டது இலங்கை. எனவே புலிகளுக்கு நிகரான கோபத்தை தொண்டு நிறுவனங்கள் மீதும் அரசு கொண்டிருந்தது.

வன்னியில் இறுதிப் போர் நிகழ்ந்த வேளை அங்கு தாம் நிகழ்த்தவிருந்த மாபெரும் மனிதப் பேரவலத்தை வெளியே தொண்டு நிறுவனங்கள் சொல்லிவிடுமோ என்ற அச்சம் அரசுக்கு இருந்தது. அதனால் தான் அவற்றை வலுக்கட்டாயமாக வன்னியில் இருந்து இலங்கை அரசு அகற்றிவிட்டு தன்னுடைய ஊழிக்கூத்தை அரங்கேற்றியது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் தொண்டு நிறுவனங்கள் மீதான கோபம் கொஞ்சம் தணிந்திருந்தது. எனினும் ஐ.நாவின் சர்வதேச விசாரணை ஆரம்பித்ததும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீதான தனது பிடியை இறுக்கத் தொடங்கியுள்ளது இலங்கை. ஏனெனில் இலங்கைக்கு வராமலேயே வேறு பொறிமுறைகள் மூலம் ஐ.நா தன்னுடைய விசாரணைகளை மேற்கொள்ள உள்ளது. எனவே இந்த விசாரணைக்கு தேவையான ஆதாரங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வழங்கி விடலாம் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அவற்றின் மீதான கட் டுப்பாடுகளையும் கண்காணிப்பையும் இலங்கை அரசு தீவிரப்படுத்திவிட்டது. என்னதான் உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடவா முடியும்?

# வலிசுமந்த உண்மைகளும் அழகான கனவுகளும்

-புருஜோத்தமன் தங்கமயில்
(நான்காம் தமிழ் ஊடகம்)

இலங்கையின் அரசியல், ஆட்சிச் சூழல் மீண்டும் கொதிநிலையில் இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை மீதான விசாரணை, அந்த விசாரணைகளுக்கு சாட்சியங்களையும், ஆதாரங்களையும் சேகரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பகிரங்க அறிவிப்பு என்பன போன்றவிடயங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கத்தை அதிகளவில் கோபம் கொள்ள வைத்திருக்கிறது.

அதன் வெளிப்பாடு கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் வார்த்தைகளினூடாகவே வெளிப்பட்டிருக்கிறது. அது,

"இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசாங்கம் இதய சுத்தியுடனேயே செயற்பட்டு வருகிறது. பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்வு காண வருமாறு அரசாங்கம் தொடர்ச்சியாகப் பல தடவைகள் தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்து வருகின்றது. ஆனால், அவர்கள் (த.தே.கூ) இதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. மாறாகத் தமக்குச் சார்பான தமிழ் ஊடகங்களில் தமக்குச் சார்பாக அறிக்கைகளை விட்டு தமிழ் மக்களை ஏமாற்றி வருவதுடன், அந்தமக்களை அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பவும் முயற்சித்து வருகின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உள்ளது. எமது பொறுமையை எவராவது பலவீனமாகக் கருதினால், அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும்" என்றவாறாக அமைந்தது.

இலங்கை ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகள் கலந்து கொண்ட சந்திப்பொன்றிலேயே மேற்கண்ட கூற்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருக்கிறார். ஊடகங்களிடமும், ஊடகவியலாளர்களிடமும் இவ்வளவு பதற்றமான வார்த்தைகளோடு அவர் பேசுவது குறைவு. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அல்லது செயற்பாடுகள் அவரை மிகவும் சோர்வடைய வைத்து கோபப்படுத்தியிருக்கின்றன. ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகளை அவ்வாறுதான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கைக்கு பதிலளித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், "இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமே வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் முறித்துக் கொண்டது. அரசாங்கம் இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்து நாட்டுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல், ஒன்றுபட்ட இலங்கைக்குள், நியாயமான, நிரந்தரமான, நடைமுறைபடுத்தக் கூடிய தீர்வுகளை அது முன்வைத்தால் நாம் ஏற்றுக் கொள்ளுவோம். நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் நோக்கம் குறித்து நாங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளோம். அது தொடர்பில், அரசாங்கத் தரப்பில் வெளியாகியுள்ள கருத்துக்கள் எமக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை"என்றுள்ளார்.

இலங்கை அரசியல் பிணக்குகள் அல்லது இனப்பிரச்சினைகள் ஆரம்பித்த காலம் முதல்

> **"இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசாங்கம் இதய சுத்தியுடனேயே செயற்பட்டு வருகிறது. பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண வருமாறு அரசாங்கம் தொடர்ச்சியாகப் பல தடவைகள் தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்து வருகின்றது. ஆனால், அவர்கள் (த.தே.கூ) இதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. மாறாகத் தமக்குச் சார்பான தமிழ் ஊடகங்களில் தமக்குச் சார்பாக அறிக்கைகளை விட்டு தமிழ் மக்களை ஏமாற்றி வருவதுடன், அந்தமக்களை அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பவும் முயற்சித்து வருகின்றனர். இது ஆரோக்கியமானதல்ல. எமது பொறுமைக்கும் ஓர் எல்லை உள்ளது. எமது பொறுமையை எவராவது பலவீனமாகக் கருதினால், அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும்"**

அப்போதைய அரசாங்கங்களுக்கும்- பிரதான தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இவ்வாறான அல்லது ஒருவரை மற்றவர் குற்றஞ்சாட்டும் தோரணையிலான கருத்து வெளிப்பாடுகளே அதிகமாக நிகழ்ந்திருக்கின்றன. மற்றப்படி, நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும், அதில் எழுதப்பட்ட விடயங்களும் அப்படியே காணாமற்போயிருக்கின்றன. இலங்கையில் காணாமற்போதல் என்பது மிகவும் சாதாரணமான விடயமாக மாறிவிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எச்சரிக்கையையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிலையோ அவ்வளவு முக்கியத்துடன் நோக்க வேண்டியதில்லை. ஏனெனில், அவை, இரண்டு மூன்று நாள்கள் ஊடக பரபரப்புக்குப் பின் அடங்கிவிடும். அதன் தாக்கம் அவ்வளவுதான்.

ஆனால், இன்னொரு புறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓரளவுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய அல்லது தைரியமான நடவடிக்கையாக, இறுதி மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் விசாரணைகளுக்கான சாட்சியங்கள், ஆதாரங்களைச் சேகரிப்பதைக் கொள்ள முடியும். ஏனெனில், போவதற்கு வேறு வழியின்றி இருக்கின்ற தமிழ் மக்களுக்கு தீர்வொன்றை முழுமையாகத் தந்துவிடாது என்றபோதிலும், மழைகாலத்தில் முளைக்கும் சிறுசெடிகள் போல சிறு நம்பிக்கையை ஐக்கிய நாடுகளின் விசாரணை அளித்திருக்கிறது. இந்த நிலையில், அந்த விசாரணைகளுக்கான சாட்சியங்கள், ஆதாரங்கள் சேகரிப்பு அல்லது அவற்றை விசாரணைக்குழுவிடம் சேர்ப்பிப்பது என்பது வரவேற்கப்பட வேண்டியதுதான்.

மக்களுக்கு உண்மையான விடுதலையை கொடுக்க வேண்டும். கடைசியாக ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். உண்மையும், நீதியும் இல்லாத இடத்தில் நல்லிணக்கம் இல்லை. தீமை செய்யாத மனிதர்களுக்கு முன்பாகத் தீமை செய்தவர்கள் வந்து தமது குற்றங்களை ஒப்புக்கொண்டு இரண்டு பகுதியினரும் அழுது கட்டிக்கெஞ்சக்கூடிய நிலைமை ஏற்படும் போது தான் உண்மையான நல்லிணக்கத்துடன் கூடிய சமாதானம் ஏற்படும் என்றொரு கூற்றை மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வெளியிட்டிருந்தார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் பிரசன்னமாகிய அவர், ஜனாதிபதி ஆணைக்குழு மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்து சாட்சியங்களை அளிக்க மறுத்த பின் ஊடகங்களிடம் தெரிவித்த கருத்தே அது. அந்தக் கருத்து (இலங்கை) நடைமுறையில் சாத்தியமில்லாதது. ஆனால், ஏதாவது ஆச்சரியங்கள் நிகழ்ந்து அது சாத்தியப்பட்டால், ஐக்கிய நாடுகளின் விசாரணை, சர்வதேச அழுத்தங்கள் இன்றி நாடு சமாதானமடையும். அப்போது, புஞ்சிநிலமேயும், புண்ணியமூர்த்தியும் கைகோர்த்து நடக்கலாம். சம்பந்தமும் செய்யலாம். இனநல்லிணக்கத்துடன் வாழலாம். இந்தக் கனவுகள் உண்மையில் எவ்வளவு அழகாக இருக்கின்றன. கனவுகள் என்றைக்குமே யதார்த்தத்தோடு ஒன்றிப் போவதில்லை என்பதுதான் வலிக்கின்ற உண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்கன்

**சப்பிரகமுவ பல்கலையில் தாக்கப்பட்ட மாணவனையும் அவருக்கு உதவி செய்த இன்னொரு மாணவனையும் பயங்கரவாத நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்கள் என்று காட்ட அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.**



# கண்ணுக்குத் தெரியாத வலையும் போரும்

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட கொதிநிலை வெளிப்பார்வைக்கு தணிந்திருப்பது போல் தென்பட்டாலும் உண்மையில் ஒவ்வொரு நிமிடமும் பிரச்சினையின் தீவிரம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்பட்ட சப்பிரகமுவ பல்கலை மாணவன் யோகராஜா நிரோஜன் இந்தப் பத்தி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது விடுதலை செய்யப்பட்ட செய்திகளை கேட்க முடிந்தது. ஆனால் தாக்குதலுக்குள்ளான மாணவனான சுதர்சன் பயங்கரவாத தடுப்புப் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்ட செய்தியும் வந்து சேர்ந்துள்ளது. நேரடியான இத்தகைய கைதுகளும்,குறித்த பிரச்சினையில் அரசும், இராணுவ- பொலிஸ் பேச்சாளர்களும் நடந்து கொண்ட விதமும் சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது திணிக்கப்பட்ட இத்தகைய அச்சுறுத்தல்களின் பின்னணி யார் என்பதை துலாம்பரமாக வெளிப்படுத்தியுள்ளது.

சப்பிரகமுவ பல்கலையில் தாக்கப்பட்ட மாணவனையும் அவருக்கு உதவி செய்த இன்னொரு மாணவனையும் பயங்கரவாத நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்கள் என்று காட்ட அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மாணவர்களை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்திவிட்டால் அவர்கள் மீது (மாணவர்கள்) திணிக்கப்பட்ட அடக்குமுறைப் பிரச்சினையின் எதிர்விளைவுகளை ஓரளவுக்கேனும் தவிர்த்து விடலாம் என்பதே அரசின் வியூகம்போலும்.

ஏற்கனவே அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களெல்லாம் கடந்த காலங்களில் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டார்கள். ஊடகவியலாளர்கள், மாற்றுக் கருத்தாளர்கள் என்போர் இவ்வாறே பயங்கரவாத முலாம் பூசப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்ட வரலாறுகளும் கடந்த காலங்களில் அரங்கேறியிருந்தது. குறிப்பாக மாவீரர்நாள் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு இந்தப் பயங்கரவாத முலாமை அரசு வலுக்கட்டாயமாக பூசியிருந்தது.அரசின் அடிவருடிகளாகச் செயற்படும் அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றுக்கு குண்டு வீசினார்கள் என்றும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் சுவரொட்டிகளை விநியோகித்தார்கள் என்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்ட பிரிவுகளின் கீழ் குற்றங்கள் சுமத்தப்பட்ட சிறைக்குள் தள்ளப்பட்டிருந்தனர்.

மக்கள் பிரதிநிதிகளாகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் அலுவலகங்கள் சிலவும் இவ்வாறு பயங்கரவாத முலாம் பூசப்பட்டு சோதனையிடப்பட்ட சம்பவங்களும் நிறைய இருக்கின்றன. இதன் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மீதும் பயங்கரவாத முத்திரை ஆழமாகக் குத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் தாக்குதலுக்கு இலக்கான மாணவன் சுதர்சன் பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுக்க முயன்றாரா என்ற கோணத்தில் விசாரிக்கப்படுவதாகவும் அவரின் கைத்தொலைபேசியில் காணப்பட்ட குறுந்தகவல் சிலவற்றை பரிசீலித்து வருவதாகவும் கடந்தவாரம் பொலிஸ்பேச்சாளர் கதைவிட்டிருந்தார்.இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டேன் என்று அவர் முறைப்பாடு செய்தமைக்கு பொலிஸ் கொடுத்த பரிசே பயங்கரவாதப் பட்டம் என்று எண்ணவேண்டியுள்ளது.

அந்தளவுக்கு முறைப்பாட்டாளரையே குற்றவாளி கூண்டில் நிறுத்தும் ஆச்சரியம் பொலிஸ் துறையாக இலங்கைப் பொலிஸாரேயே கருதமுடியும். போதாக்குறைக்கு இனிவரும் காலங்களில் பொலிஸ் அதிகாரிகளுக்கான பயிற்சிப் பட்டறையின் போது கூட முறைப்பாட்டாளர் மீது எப்படி வழக்கைத் திசை திருப்புவது என்ற உத்தியை பொலிஸ் பேச்சாளர் கற்றுக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கடந்த மாதம் 11ஆம் திகதியே " தமிழ் மாணவர்கள் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறாவிட்டால் சுட்டுக்கொல்வோம்" என கொச்சைத் தமிழில் பல்கலைக்கழக மலசலகூடத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இந்தச் சுவரொட்டிகளை மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் கையளித்திருந்தனர். ஆனபோதிலும் அது தொடர்பில் சப்பிரகமுவ பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி எடுக்கப்பட்டிருந்தால் ஒருவேளை குறித்த மாணவன் மீதான தாக்குதலை தடுத்திருக்க முடியும். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தத்தால் சுதர்சன் என்ற மாணவன் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு உள்ளானதோடு அது பற்றி முறையிட்டதால் பயங்கரவாத பட்டத்தையும் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தின் போது தமிழ் மாணவர்களை அச்சுறுத்தும் வகையிலான சுவரொட்டிகளை ஒட்டியவர்களையும், மாணவனை தாக்கியவர்களையும் கண்டுபிடிக்க வக்கற்ற பொலிஸ், தனது வீரத்தை தாக்குதலுக்கு உள்ளானவர்கள் மீதே காட்ட முற்படுகிறது.உண்மையில் பொலிஸாரின் விசாரணை குற்றவாளிகள் யார் என்று தேடுவதை விடவும் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் மாறத்தான் இவ்வாறான வேலைகளைச் செய்கிறார்கள் என்ற கோணத்திலேயே இருந்தது.அதனாலேயே மாணவர்களுக்கு பயங்கரவாத முத்திரையைக் குத்தி பிரச்சினையை தனக்கேற்ற விதத்தில் முடித்துக் கொள்ள பொலிஸ் தரப்பு நினைக்கிறது.

இந்தத் தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட மாணவன் சுதர்சன் வழங்கிய தகவலின் படி சுமார் 30 தொடக்கம் 35 வயது மதிக்கத்தக்கவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக கூறுகிறார்.

இந்தத் தாக்குதல் வெளியில் இருந்து வந்த கும்பல் ஒன்றினாலேயே நடத்தப்பட்டிருக்கிறது. இனவாதத்தை மாணவர்கள் மத்தியில் தூண்டி அவர்களை வன்முறையாளர்களாக மாற்றி அவர்களின் குரல்களுக்கெல்லாம் பயங்கரவாத முலாம் பூசும் இன்னொரு செயற்றிட்டமும் இதற்குள் உள்வாங்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகமும் எழுகின்றது. அத்துடன் தமிழ்- சிங்கள - முஸ்லிம் என்ற பிரிவினைகளை மாணவர்கள் மத்தியில் உருவாக்கி அரசியல் நடத்த முயலும் ஒரு கூட்டத்தின் சதிவலையாகவும் இருக்கக் கூடும்.

மொத்தத்தில் நன்கு திட்டமிடப்பட்டு சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் அரசால் அரங்கேற்றப்பட்டிருக்கும் நாடகத்தின் உண்மை முகத்தை பொலிஸ்மற்றும் இராணுவ பேச்சாளர்களின் குரல்களிலிருந்து தரிசிக்க முடியும்.

இந்தத் தாக்குதல் மற்றும் கைதுக்கு எதிராக சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்துக்குள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கான சிங்கள மாணவர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்துக்குள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சிங்கள மாணவர்களின் பங்குபற்றல் மிகக்குறைவாகவே இருந்தது. வழமையாக எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டம் என்றும் கிளம்பும் அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் சங்கம்கூட இந்த ஆர்ப்பாட்டத்தில் களமிறங்கவில்லை.

மாணவ சமுதாயம் அதிகாரம் விரிக்கின்ற வலையில் சிக்கி தன்னுடைய சக்தியை இழந்துவிடக்கூடாது மாணவர்களின் பலமே அவர்களின் ஒற்றுமையில் தான் தங்கியுள்ளது.இனமத பேதங்களைக் கடந்து தமிழ் மாணவர்கள் மீது சப்பிரகமுவ பல்கலையில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத போரை வெல்வதற்கு மாணவ சமுதாயம் ஒன்றிணைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலன் கண்டு கொள்ளாத போது...

பொதுவாக காதலிக்கும் ஆரம்ப காலத்தில் விழுந்து விழுந்து காதல் செய்யும் ஆண்கள், நாளடைவில் காதலியைக் கண்டுகொள்வதே இல்லை. இதனால் பல காதலிகள் மிகவும் வருந்தமடைகின்றனர். மேலும் தங்கள் காதலனுக்கு தன்னை பிடிக்கவில்லையோ என்று எண்ணி, அவர்களுடன் சண்டையும் போடுகின்றனர். ஏனெனில் பெண்களுக்கு காதல் வந்த பின்னர், தங்களின் காதலன் மீது அன்பு அளவுக்கு அதிகமாகி,



அவர்களுடனேயே இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். ஆனால் அந்த கட்டத்தில் தான் ஆண்கள், தங்கள் காதலியைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். இதனால் காதலிக்கும் சில பெண்கள் காதல் வாழ்க்கையை வெறுத்து, காதலே வேண்டாம் என்று எண்ணுகின்றனர். பல பெண்கள் தினமும் மனதில் அழுது கொண்டு இருக்கின்றனர். மேலும் காதலனிடம் தங்களது பிரச்சினைகளை சொன்னாலும், அதை காதலன் புரிந்து கொள்ளாமல் நடக்கின்றான் என்று, சில நேரங்களில் வாழ்க்கையை வெறுக்கின்றனர். உண்மையில் அந்த நிலையில் பெண்கள் அப்படி தவறான முடிவை எடுக்காமல், காதலிப்பதற்கு முன்பு எப்படி இருந்தீர்களோ அப்படி காதலை வெளிப்படுத்தாமல்மாறினால், பின் தானாக உங்கள் காதலன் உங்களை தேடி வருவார். அதற்குச் சில ஆலோசனைகள் இங்கே.

1. காதலில் விழுந்த பின்னர் பெண்கள், காதலன் அழைத்த உடனேயே வந்துவிடுவார்கள். ஆனால் உங்கள் காதலன் உங்களைக் கண்டு கொள்ளாமல் எப்போதாவது உங்களைக் காண அழைத்தால், அப்போது அவரைச் சந்திக்க செல்ல வேண்டாம். இதனால் அவர்கள் உங்களை அதிகம் இழப்பதாக எண்ணி, உங்கள் நினைப்பாகவே இருப்பார்கள். பின்னர் தான் உங்களின் அருமை அவர்களுக்கு புரியும்.

2. எப்போதும் அவர்களுடனேயே நேரத்தைச் செலவழிக்காமல், சற்று நண்பர்களுடனும் நேரத்தைச் செலவழியுங்கள். ஏனெனில் வாழ்வில் நண்பர்களும் மிகவும் முக்கியமானவர்கள். எனவே மனம் கஷ்டமாக இருக்கும் தருணம், நண்பர்களுடன் நேரத்தைச் செலவழியுங்கள். அப்படி நேரத்தைச் செலவழிக்கும் போது, உங்கள் காதலன் போன் செய்தால் எடுக்காதீர்கள். சொல்லப்போனால் அவர்களைக் கண்டு கொள்ளாதீர்கள். அப்படி செய்தால் தான், உங்கள் காதலனுக்கு நீங்கள் இல்லாத வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று தெரியும். பின்னர் என்ன, இனிமேல் உங்கள் நினைவாகவே இருப்பார்கள்.

3. வாழ்வில் ஆச்சரியம் இல்லாவிட்டால், வாழ்க்கை சுவாரஸ்யமாகவே செல்லாது. ஆகவே நீண்ட நாள்கள் அவர்களுடன் பேசாமல் இருந்து, பின் அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் கொடுக்கலாம். உதாரணமாக, அவர்களின் சின்னச் சின்ன கனவுகளை அவ்வப்போது நிறைவேற்றுவது. இவ்வாறெல்லாம் செய்தால், நீங்கள் அவர்கள் மேல் வைத்துள்ள அன்பை அவர்கள் உணர்ந்து, இனிமேல் சரியாக நடந்து கொள்வார்கள்.

4. தினமும் உங்கள் காதலனைத் கவரும் வகையிலும், அவர்களுக்கு பிடித்தவாறும் அழகான ஆடைகளை அணிந்து வாருங்கள். சொல்லப்போனால், மற்ற ஆண்கள் உங்களை சைட் அடிக்கும் வண்ணம் அணிந்து வாருங்கள். இதனால் உங்கள் காதலன் இவள் என் காதலி என்ற பெருமிதத்துடன், உங்களை சைட் அடித்து கொண்டிருப்பான்.

5. சந்தோஷமாக இருங்கள் உங்கள் காதலனிடம் சரியாக பேசாமல் இடைவெளியை மேற்கொள்ளும் போது, அவர்களின் முன்பு எதைப் பற்ஷியும் கவலைப்படாமல் சந்தோஷமாக இருப்பது போல் நடந்து கொள்ளுங்கள். இதனால் இத்தனை நாட்கள் நீங்கள் பேசியதை சீரிஸாக எடுத்துக் கொள்ளாத அவர்கள், பின் உங்களிடம் வந்து சீரியஸாக பேசுவார்கள். அதன் பின் நீங்கள் உங்களது மனதில் உள்ளதை சொல்லுங்கள். எப்போதுமே ஒருவரின் வலியை மற்றவருக்கு சொன்னால் புரியாது, அதை அனுபவித்தால் தான் புரியும். எனவே அனுபவத்தைக் கொடுத்து, உங்களின் அருமையை புரிய வையுங்கள்.

# மாட்டிக் கொள்ளாமல் காதலிக்க...!

தப்பித்தல்-- 5


காதல் வந்தவுடனேயே காதலர்களுக்கு அவர்களை அறியாமல் ஒரு பழக்கம் தொற்றி விடுகிறது. தன்னுடையதும் காதலருடையதும் பெயர்களையோ அல்லது இருவரினதும் முதலெழுத்துகளையே ஒன்றிணைத்து அகப்பட்ட இடத்தில் எழுதிக் கொள்வார்கள். அது பள்ளிக்கூட சுவரிலிருந்து கழிவறைக் கதவு வரை நீளும். பொதுவாகவே காதலரோடோ அல்லது வேறு யாரோடோ தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருக்கும் போது பழக்க தோசத்தில் தங்கள் பெயரோடு காதல் துணையின் பெயரையோ முதலெழுத்தையோ இணைத்து மனம்போன போக்கில் கிறுக்கிக் கொண்டிருப்பார்கள். இது திட்டமிட்டு நடப்பதில்லை. அவர்களை அறியாமலே இப்படிக் கிறுக்குவதால் தொலைபேசியில் உரையாடி முடித்துவிட்டு எழுந்து போகையில் தாங்கள் கிறுக்கியதை மறந்து விடுகிறார்கள். ஆனால் அதுவே அவர்களின் காதலைக் காட்டிக் கொடுக்கும் ஆதாரமாக மாறி விடுவது தான் பரிதாபம்.

- சில காதலர்கள் நேரே சந்தித்துக் கொள்ள வாய்ப்புகள் குறைவாக இருக்கும். அல்லது அப்படி நடந்தால் காதல் விடயம் பகிரங்கமாகி எல்லோருக்கும் தெரிந்து விடவும் கூடும். எனவே தங்களுடைய பரிமாற்றங்களுக்கு நம்பிக்கைக்குரிய ஒருவரையோ அல்லது சிலரையோ காதலர்கள் நம்பியிருப்பார்கள். காதல் கடிதங்கள், பரிசுப்பொருள்கள், நினைவுச் சின்னங்கள், அவசர தகவல்கள், சந்திப்புக்கான திட்டமிடல்கள் என்பனவெல்லாம் இத்தகைய மூன்றாம் நபரூடாகவே நிகழும். சில சந்தர்ப்பங்களில் இந்த மூன்றாம் நபரே காதலுக்கு எதிரியாகவும் மாறிவிடக்கூடும். தனிப்பட்ட பொறாமை, திடீர் விரோதம் போன்றவற்றால் இத்தகைய மூன்றாம் நபர்கள் காதல் விடயங்களை பொதுவெளியில் போட்டுடைப்பார்கள். அல்லது காதலர்கள் இருவருக்குமிடையே தேவையற்ற முரண்பாடுகளை தோற்றுவித்து இருவரையும் பிரிந்து போகச் செய்யுமளவுக்கு பிரிவினையை ஏற்படுத்தி விடுவார்கள். எனவே இந்த மூன்றாம் தரப்பு என்ற விடயத்தை இயன்ற வரை காதலர்கள் தவிப்பது நலம்.

(ஆலோசனைகள் தொடரும்)

# வாழ்விலும் சாவிலும்...







" வாழ்ந்தாலும் செத்தாலும் நாங்கள் பிரியாமல் இருப்போம்" பொதுவாக எல்லாக் காதலர்களும் இந்த வார்த்தைகளை தமக்குள் பரிமாறியிருப்பார்கள். ஆனாலும் யதார்த்தத்தில் இது எவ்வளவு தூரம் சாத்தியமானது? எல்லா காதலர்களும் காதலித்தவர்களையே திருமணம் செய்வதில்லை. பல காதல்கள் பாதியிலேயே கருகி விடுகின்றன. தப்பிப் பிழைத்து திருமண பந்தத்தில் இணைகின்ற காதலர்களும் போகப்போக காதல் சலித்துப் போனவர்களாக மாறிவிடுகிறார்கள். ஏனோ தானோ என்றே அவர்களின் வாழ்க்கை நகர்கிறது. சிலரின் வாழ்வு மட்டுமே கடைசி வரை இனிப்பாக இருக்கிறது. அப்படி இல்லறத்தை இனிமையோடு கழிக்கும் காதல் தம்பதிகள் கூட இறப்பில் ஒன்று சேர முடிவதில்லை. ஆனால் அமெரிக்காவில் டொன், மக்சின் சிம்ஸன் என்ற காதல் ஜோடி வாழ்வில் மட்டுமல்லாது சாவிலும் ஒன்றாகவே இணைந்துள்ளது. இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் முடித்து இனிமையோடு வாழ்ந்து வந்தார்கள். எனினும் முதுமை இவர்களின் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்த போது இருவரும் ஒருவரின் கரத்தை ஒருவர் பிடித்தபடி தங்களுடைய காதலில் எள்ளவும் மாற்றம் இல்லையென்பதை உணர்த்தியபடி கடந்த வாரம் உயிரைத் துறந்துள்ளார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப் பெருமிதமும் முதுகுப் புண்ணும்

அண்மையில் கல்கமுவ பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் மகனான நான்கு வயதுச் சிறுவன் பெற்றோர் முன்னிலையிலேயே முகமூடி அணிந்த நபர்களால் கடத்தப்பட்டான். உடனடியாகவே பொலிஸார் ஐந்து குழுக்களை அமைத்து பல முனைகளிலும் விசாரணைகளை ஆரம்பித்தனர். இருபத்தியிரண்டு மணித்தியாலங்களின் பின்பு சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கருத்து வெளியிடும் போது. "இலங்கைப் பொலிஸார் ஆசியாவிலேயே அதி சிறந்த பொலிஸ் படை என்பதை நிரூபித்துள்ளனர்" எனப் பெருமிதப்பட்டுக் கொண்டார். ஜனாதிபதியும் சிறுவனையும் அவனின் பெற்றோரையும் அழைத்து அன்பளிப்பு வழங்கித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

ஊடகவியலாளர்கள் பிரகீத் எக்னெலிகொட உட்படப் பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். அதே போன்று லலித்,குகன் ஆகிய முற்போக்கு சோசலிசக் கட்சியைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்தப்பட்டனர். காலம் வருடங்களைக் கடந்து விட்ட போதிலும் அவர்கள் இது வரை கண்டு பிடிக்கப்படவில்லை. இதே போன்று இறுதிப் போரின் போதும் அதற்கு முன்னரும் தமிழ் இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களாக மாற்றப்பட்டார்கள். ஆசியாவிலேயே சிறந்த பொலிஸ் சேவையினால் ஏன் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களையோ, அரசியல் செயற்பாட்டாளர்களையோ,ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்களையோ கண்டு பிடிக்க முடியவில்லை என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஆனால் பொலிஸார் மேற்கொண்டு வரும் பல நடவடிக்கைகளின் மூலம் இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டு பிடித்து விட முடியும்.

கொழும்பு மருதானையில் ஒரு தேவாலயத்தில் 'காணாமற் போனோர் தொடர்பான செவிமடுத்தலும் பகிர்தலும்' என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் காணாமற்போனோரின் உறவுகள்,மதகுருமார் உட்பட சிவில் சமூகத்தினர் , அமெரிக்கா,சுவிஸ், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் தூதுவராலயப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆனால் அங்கு வந்த புத்தபிக்குகள் தலைமையிலான ஒரு குழுவினர் பலவந்தமாக அந்தக் கலந்துரையாடலைக் குழப்பியதுடன்,தொடர்ந்தும் நடத்த விடாமல் தடுத்தும் விட்டனர்.இதன்போது சம்பவ இடத்துக்கு பிரசன்னமான பொலிஸாரும் குழப்பக்கார கும்பலுக்குச் சாதகமாகச் செயற்பட்டதோடு கலந்துரையாடலை நிறுத்தும் படி கூறிவிட்டனர்.

உண்மையில் புத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் அத்துமீறியே ஆலய வளாகத்துக்குள் புகுந்தனர்.இது 'ட்றேன் பாஸ்' எனக் கூறப்படும் குற்றவகைக்குள் அடங்கும். ஒரு கலந்துரையாடலைத் தடுத்து நிறுத்துவது ஒன்று கூடும் சுதந்திரம்,பேச்சுச் சுதந்திரம் என்பவற்றை மறுதலிக்கும் இன்னுமொரு குற்றமாகும் .

இந்த இரு குற்றங்களையும் செய்து குழப்பம் விளைவித்தவர்களைப் பொலிஸார் உடனடியாகக் கைது செய்திருக்க வேண்டும் . அல்லது தடியடி, கண்ணீர்ப்புகை என்பவற்றை நடத்தி விரட்டியிருக்க வேண்டும். ஆனால் பொலிஸார் குற்றங்களில் ஈடுபட்டோர் விரும்பியதையே நிறைவேற்றி குறித்த கலந்துரையாடலைத் தடுத்து விட்டனர்.


பொலிஸாரின் முன்னிலையில் இடம்பெற்ற சட்ட விரோதக் குற்றங்களை தடுத்து நிறுத்தாதது மட்டுமன்றி பொலிஸார் அந்த குற்றங்கள் நிகழ்வதற்கு சாதகமாகவும் நடந்து கொண்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸார் சட்ட விரோதச் செயல்களுக்குத் துணை போவதன் மூலம் ஆசியாவிலேயே சிறந்த பொலிஸார் (?)தாமே என்பதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் சுதர்சன் என்ற தமிழ் மாணவன் தாக்கப்பட்டு கழுத்து கயிற்றினால் இறுக்கப்பட்டான். அவன் மயக்கமடையும் வரை முகமூடி அணிந்த சிலரால் நையப்புடைக்கப்பட்டான். ஏற்கனவே கடந்த இருபதாம் திகதி தமிழ் மாணவர்கள் எல்லோரும் வெளியேறி விட வேண்டும் எனவும் இல்லையேல் அவர்கள் கொல்லப்படுவார்கள் எனவும் தமிழ் மாணவிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அங்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திடம் முறையிட்ட போதும் எந்த விட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மீண்டும் அதே விதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட அன்றே தமிழ் மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண அவர்கள் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் சிங்கள தமிழ் முஸ்லிம் மாணவர்கள் ஒற்றுமையாகக் கல்வி கற்று வருவதாகவும் இந்தச்சம்பவம் ஒரு சில தீவிரவாத சக்திகளின் வேலை எனவும் தெரிவித்துள்ளார்.

மிக இறுக்கமான பாதுகாப்பு உள்ள ஒரு வளாகத்தில் சத்தமின்றி உட்புகுந்து இரு தடவைகள் சுவரொட்டிகளை ஒட்டுவதும், மாணவனை மயக்கமடையும் வரை தாக்குவதும் எப்படி நடக்க முடியும்? மாணவர்கள் சுவரொட்டிகளைப் பற்றி முறையிட்ட போது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.மாறாக தாக்குதலுக்கு உள்ளானவர்களையே கைது செய்து தனது வீரத்தை காட்டியிருக்கிறது இலங்கைப் பொலிஸ்.





மாணவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டவர்கள் தீவிரவாத சக்திகள் தான் என்றால் ஆசியாவின் சிறந்த பொலிஸாரால் ஏன் அவர்களைக் கைது செய்ய முடியவில்லை?

ஏற்கனவே பொலிஸார் முன்னிலையிலேயே மஹியங்கனைப் பிரதேச சபை உறுப்பினர் விஜிததேரரின் ஊடகவியலாளர் மாநாடு குழப்பப்பட்ட போதும், அமைச்சர் ரிசாட் பதியுதீனின் செயலகத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்த போதும் கூட சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவில்லை; விரட்டப்படவுமில்லை.

இலங்கைப் பொலிஸே ஆசியாவின் தலைசிறந்த பொலிஸ் என்பதன் உண்மைத்தன்மை இப்படித் தான் மக்கள் முன்னிலையில் அம்பலப்பட்டு நிற்கிறது.

எவ்வளவு தான் அலங்காரம் செய்து முகத்தில் பெருமிதம் காட்டினாலும் முதுகுப்புண்ணின் நாற்றத்தை யாராலும் மறைத்து விட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்


# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 25

ஜோஸியம், கைரேகை முதலியவற்றில் கரை கண்டவரும், ஆறு சாஸ்திரங்களை கற்றறிந்தவருமாகிய நாசிக்கைச் சேர்ந்த வைதீகமான அக்னிஹோத்ரி அந்தணர் முலே சாஸ்திரி ஒருமுறை நாக்பூரின் புகழ்பெற்ற கோடீஸ்வரரான பாபு ஸாஹேப் புட்டியைச் சந்திக்க சீர்டிக்கு வந்தார். அவரைச் சந்தித்த பின்னர், அவரும் மற்றவர்களும் பாபாவைக் காண மசூதிக்குச் சென்றனர். பாபா தம்முடைய சொந்தப் பணத்திலேயே வெவ்வேறு பழங்களையும், மற்றப் பொருட்களையும் விற்பனையாளரிடமிருந்து வாங்கி மசூதியிலுள்ள மக்களுக்கு விநியோகித்தார். பாபா மாம்பழத்தை அதன் எல்லாப் பக்கங்களிலும் மிகத் திறமையாக அழுத்துவது வழக்கம். ஒருவன் பாபாவிடமிருந்து அதை வாங்கி உறிஞ்சுவானேயாகில் எல்லா சதைப்பற்றையும் உடனே தன்வாயில் உறிஞ்சிக் கொண்டு கொட்டையையும், தோலையும் உடனே தூக்கி எறிந்து விட முடியும்.வாழைப் பழங்களை உரித்து சதைப்பற்றை அடியவர்கட்கு விநியோகித்து, தோலை பாபா தமக்காக வைத்துக் கொள்வார். கைரேகை சாஸ்திரி என்ற முறையில் முலே சாஸ்திரி, பாபாவின் கையைப் பரிசோதிக்க விரும்பினார். பாபாவிடம் கையைக் காண்பிக்க கோரினார். பாபா அவருடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. அவருக்கு நான்கு வாழைப்பழங்களைக் கொடுத்தார். எல்லோரும் வாடாவுக்குத் திரும்பினர். முலே சாஸ்திரி குளித்துப் புனித ஆடைகளை அணிந்து அக்னிஹோத்தரம் போன்ற தன் நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்ய ஆரம்பித்தார். பாபா வழக்கம் போல் லெண்டியை நோக்கிப் புறப்பட்டார். "கொஞ்சம் ஜெரு (குங்குமப்பூ நிறத்தில் துணியைச் சாயம் போடுவதற்கான சிகப்பு மண்ணைப் போன்ற ஒரு பொருள் )எடு. நாம் இன்று குங்குமப்பூ நிற உடை உடுத்தலாம்" என்று பாபா கூறினார். பாபா என்ன சொல்கிறார் என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. சிறிது நேரம் கழித்து ,பாபா திரும்பி வந்தார். மத்தியான ஆரத்திக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பாபுஸாஹேப் ஜோக், முலே சாஸ்திரியிடம் அவர் தன்னுடன் ஆராதிக்கு வருகிறாரா என்று கேட்டார். மாலையில் தான் பாபாவைப் பார்க்கப் போவதாக அவர் பதிலளித்தார். இதற்குச் சிறிது நேரத்தில் பாபா தமது ஆசனத்தில் அமர்ந்தார். அடியார்களால் வழிபடப்பட்டார். ஆரத்தியும் துவங்கியது. பிறகு பாபா "புது (நாசிக்) பிராமணனிடமிருந்து தக்ஷிணை வாங்கி வா" எனக் கூறினார்.புட்டி தாமே தக்ஷிணை வாங்கச் சென்றார். பாபாவின் செய்தியை மூலே சாஸ்திரியிடம் தெரிவித்தபோது அவர் சொல்லப் பெறாத அளவு குழப்பமடைந்தார். "நான் தூய அக்னிஹோத்ரி பிராமணன்.நான் ஏன் தக்ஷிணை கொடுக்கவேண்டும்? பாபா பெரிய முனிவராக இருக்கலாம். நான் அவரது சீடனல்ல" என நினைத்தார். ஆனால் சாயிபாபாவைப் போன்ற ஞானி புட்டியைப் போன்ற கோடீஸ்வரரிடம் தக்ஷிணை கேட்டனுப்பியிருப்பதனால் அவரால் மறுக்க இயலவில்லை. எனவே தனது அனுஷ்டானத்தை பூர்த்தியாக்காமல் உடனே மசூதியை நோக்கிச் சென்றார். தூயவராகவும், புனிதமான வராகவும், மசூதியை வேறுவிதமாகவும் கருதிய அவர் சற்றுத் தூரத்தில் இருந்தே கைகளைக் சேர்த்து பாபாவின் மீது புஷ்பங்களை வீசினார். அப்போது திடீரென்று ஆசனத்தில் அவர் பாபாவைக் காணவில்லை. காலஞ்சென்ற தனது குரு சுவாமியையே அங்கு கண்டார். ஆச்சரியத்தால் அவர் செயலிழந்தார். இது கனவாயிருக்குமோ? அல்ல. அங்ஙனமன்று!அவர் அகல விழித்திருந்தார். காலஞ்சென்ற தனது குரு கோலப் சுவாமி எங்ஙனம் அங்கு இருக்க முடியும்? சிறிது நேரம் அவர் பேச்சற்று விட்டார். தன்னையே கிள்ளிவிட்டுக் கொண்டார். திரும்பவும் நினைத்தார். ஆனால் காலஞ்சென்ற தனது குரு மசூதியில் இருக்கும் உண்மையை அவரால் ஏற்க முடியவில்லை. முடிவில் எல்லா ஐயங்களையும் களைந்துவிட்டுத் தெளிந்த நிலையில் தனது குருவின் அடிகளில் பணிந்து கூப்பிய கரங்களுடன் நின்றிருந்தார். மற்ற எல்லோரும் ஆராதித்துப் பாட்டுப் பாடுகையில் மூலோ சாஸ்த்திரி தனது குருவின் பெயரை இரைந்து கூக்குரலிட்டார். இனப் பெருமை,புனிதத் தன்மையைப் பற்றி எண்ணங்களை ஒதுக்கி எறிந்து விட்டு தனது குருவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கண்களை மூடிக் கொண்டார்.எழுந்திருந்த போதும் பாபா தக்ஷிணை கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டார். பாபாவின் பேரானந்த ரூபத்தையும் சிந்தனைக்கு அப்பாற்பட்ட அவரின் சக்தியையும் கண்டு முலே சாஸ்திரி தன்னையே மறந்தார். எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார். ஆனந்தக் கண்ணீர் வடித்தார். தனது சந்தேகம் நீங்கி விட்டதாகவும் தன் குருவையே கண்டதாகவும் அனைவரும் முலே சாஸ்திரி உட்பட மிகவும் மனதுருகிப் போயினர். 'ஜெரு எடு,நாம் இன்று குங்குமப்பூ வண்ண உடை உடுத்தலாம் ' என்ற பாபாவின் மொழிகளை இப்போது புரிந்து கொண்டனர். சாயிபாபாவின் லீலை அத்தகைய அற்புதம் வாய்ந்ததாகும்.

(ஞானத்தை தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 633



**மேலிருந்து கீழ்**

1-பாதிப்பை ஏற்படுத்தும் எதிர்பாராத திடீர் நிகழ்வு.
2-சுவை உணர்வு.
3-ஒட்டை.
4-நமது.
5-வெட்டு.
8-கோல்.
9-வஞ்சகத்தனம்.
10-ஊடகங்களில் முக்கிய இடம் இதற்கு உண்டு.
12-நூற்றுக்குப் பங்கு காணுதல்.
13-சேர்.
15-படிப்பது இதனை.
16-கோணி (ப்பை).
17-நெல் விளைவது இங்கே.
19-பூட்டான் தலைநகர்.
20-நல்ல.
21.வாழ்.

**இடமிருந்து வலம்**

1-உணவளித்தல்.
4-வழங்க.
6-இது வந்திடப் பத்தும் பறந்துபோம்.
7.மூட்டில் வரும் நோவு.
9-ஒரு காட்டு மிருகம்.
10-தலையெழுத்து.
11-தீவு.
13-போட்டி மைதானம்.
14-மறி.
15-பள்ளத்தைக் கடப்பதற்கு அமைப்பது.
16-ஒரு ஏவுகணை வகை.
17-ஒரு திசையின் சுருக்கம்.
18-தலைவன்.
20-பெண் ஒருத்தி தனது கணவனை, தானே வரிந்து மாலையிடும் நிகழ்வு.
22-கூட்டம்.
23.சிராய்.

அனுப்புபவர் பெயர்:------------------------------
விலாசம்:------------------------------
------------------------------
கையொப்பம்:------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 633

■ சொற்சிலம்பம் போட்டி 633ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே செப்ரெம்பர் 03ஆம் மற்றும் செப்ரெம்பர் 10ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபா லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 630இல் பரிசு பெற்றோர்

1 அ.ராதாமணி, A.R.S. கண்டி வீதி, சாவகச்சேரி.
2 நா.பர்சிகா, பட்டினசபை வீதி, ...காணை.
3 வ.ஆ.அதிருபசிங்கம், அம்மன்கோவிலடி, ...வெட்டித்துறை

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும்.நெல்லியடி,சாவகச்சேரி,கிளிநொச்சி,கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

ம.விஸ்ரஜினா, 28/3, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி த.இராசதேவி, 'தசபவனம்',சிறுப்பிட்டி நீர்வேலி.

க. பிறின்சியா, மடத்தடி,சாவகச்சேரி வடக்கு,சாவகச்சேரி.

திருமதி தி. புவனம், நாவற்குழி கிழக்கு, கைதடி.

இ. செல்லம்மா, மே/பா-வே. இராசநாயகம், சோறன்பற்று, பளை.

### சொற்சிலம்பப் போட்டி 630இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**


1.ஜம்பது
2.பகுப்பு
3.சிம்பு
4.தம்புரா
5.குட ல்
8.சம்பந்தம்
10.சம்பவம்
12.கிடை_
13.கோன்
15.கும்பிடு
16.கமுகு
17.தலை
18.சடுதி
20.குரு

**இடமிருந்து வலம்**

1.ஜப்பசி
4.தரகு
6.கும்பம்
7.பசப்பு
9.புசல்
11.தும்பு
12.கிராம்
13.கோடை
14.பகு
16.சுந்தன்
18.சவம்
19.முதலை
20.குடும்பி
21.கும்
22.குருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களே...!
இந்த காலைக் காட்சியை
வர்ணங்களால் மெருகூட்டுங்கள்.



## பள்ளிக்கூடம்

நாளைய உலகின் நாயகராக
நம்மை ஆக்கும் பள்ளிக்கூடம்!

நன்மை, தீமை என்பது அறிந்து
நடக்க வைப்பது பள்ளிக்கூடம்!

எண்ணும் எழுத்தும் கண்எனத் தருமே!
இளமையில் கல்வி வளமை தருமே!

அறிவே உலகில் அழியாச் செல்வம்!
ஆசிரியர்களே நாம் தொழும் தெய்வம்!

சீருடை அணிந்து ஓரணி நிற்போம்!
சீர்தரும் கல்வியை நேர்படக் கற்போம்!

பூமியில் புதிய மனிதராய் உயர்வோம்!
புத்தக நெறிப்படி வாழ்வினில் நடப்போம்!

-ஆர். விவேகானந்தர்

## எறும்பின் கர்வம்

ஒரு எறும்பு தனது சுறுசுறுப்பான நடையை நினைத்து. நினைத்து எப்போதும் கர்வத்துடன் சுற்றி வந்தது.

ஒருமுறை அது உணவைத் தேடிச் செல்லும் வழியில், ஒரு புழு நகர முடியாமல் சுருண்டு கிடந்தது.

அந்தப் புழுவைப் பார்த்து எறும்பு, ""இதோ பார் புழுவே... நான் எவ்வளவு சுறுசுறுப்பாக நடக்கிறேன். நீ இப்படி சுருண்டு கிடக்கின்றாயே... எல்லாம் நேரம்தான்..."" என்று கேலி பேசியது.

சில நாள்கள் சென்றன. அதே வழியாகத் திரும்பவும் அந்த எறும்பு வந்தது. அப்போது பழைய புழுவைப் பார்த்துக் கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அதைத் தேடியது.

அப்போது அங்கே ஓர் அழகிய பட்டாம்பூச்சி அங்குமிங்கும் படபடவென்று சிறகை அடித்துக் கொண்டுப் பறந்து கொண்டிருந்தது.

ஒன்றும் புரியாமல் விழித்த எறும்பைப் பார்த்துப் பட்டாம்பூச்சி, ""எறும்பே! எப்போதும் நீ தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறாய். நான் ஒருசமயத்தில் புழுவாக சுருண்டு கிடந்தாலும் இப்போது முழு வளர்ச்சி பெற்ற பட்டாம்பூச்சியாக அழகாகப் பறந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் நேரம்தான்..."" என்று சொல்லிவிட்டுப் பறந்தது.


இன்று ஒருவனை நீ துரும்பாக நினைத்து அவமதித்தால் பின்னால் நீ அவன் மூலமாகவே அவமதிக்கப்படுவாய்" என்று அசரீரியாக ஒரு குரல் எறும்பின் காதுகளுக்குக்

## கோபம்

1. எவன் ஒருவன் தனது கோபத்தைத் தடுத்துக் கொள்கிறானோ அவன் தன்னுடைய பெரிய எதிரியை வெற்றி கொண்டவன் ஆகிறான். - லத்தீன்
2. கோபம் கொப்பளிக்கும் அந்த ஒரு கணத்தில் நீ பொறுமை காத்தால் நூறு நாள் துன்பத்தில் இருந்து தப்பி விடுவாய். - சீனா
3. கோபத்தை வெளிக்காட்டுவது குளவிக் கூட்டின் மீது கல்லெறிவதற்குச் சமமானது. - மலபார்
4. கோபத்தை வெற்றி கொள்வதற்கு ஒரே வழி அதைத் தாமதப்படுத்துவது. - செனேகா
5. ஒரு கண நேரத்தின் கோபத்தை அடக்கி வைப்பவன் ஒரு நாளைய துயரத்தை அடக்கியவனாவான். - முதுமொழி
5. கோபம் தலைதூக்கும்போது அதன் பின்விளைவுகளைச் சிந்தித்துப் பாருங்கள். - கன்ஃபூஷியஸ்
6. அமைதியான. மன்னிக்கக்கூடிய. சமநோக்குடைய. நிலை குலையாத மனமுடையவனே அதிக அளவு செயல்பட முடியும்.
 - சுவாமி விவேகானந்தர்

## கண்டுபிடியுங்கள்

இரு படங்களுக்கு மிடையே 5 வித்தியாசங்கள் உள்ளன.



## மெதுவாகச் சிரியுங்கோ...




வாமு: நான் வெள்ளிக்கிழமை பிறந்ததுனால, எங்க வீட்டில எனக்கு 'வெள்ளியன்'னு பேர் வச்சிட்டாங்க!
கோபு: நல்லவேளை... நீ சனிக்கிழமை பிறக்கேலை..!

## டுகான் பறவை

டுகான் பறவைகளில் ஏராளமான வகைகள் உண்டு. ஒவ்வொரு இனப்பறவையின் அலகும் ஒரு வண்ணத்தில் இருக்கும். இதில் இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால். இந்தப் பறவையின் அலகுகள் அதன் வளர்ச்சிக் கேற்ப நிறம் மாறிக்கொண்டே இருக்கும். இந்த டுகான் பறவைகளின் சிறகுகள் நீண்ட தூரம் பறப்பதற்கு சக்தி வாய்ந்த தில்லை. ஆனால். மரத்துக்கு மரம் தாவி பறப்பதில் வல்லமை பெற்றவை.

டுகான் பறவைகளின் அலகு மிகவும் அழகாகவும். பார்ப்பதற்கு வித்தியாசமாகவும். கனமாக உள்ளது போலவும் காணப்படும். ஆனால், அலகினுள் "ஸ்பொன்ஜ்" போன்று மெத்தென்று இருப்பதால் இப்பறவைக்கு பாரம் தெரியாது

### மறைந்திருக்கும் மரக்கறிகளை இனங்காணுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துப் பெண்ணாக அஞ்சலி

'சேட்டை' படத்துக்கு பிறகு தமிழில் எந்தப் படத்திலும் நடிக்க வில்லை அஞ்சலி. சித்தியுடன் பிரச்சினை, இயக்குநர் களஞ் சியத்துடன் பிரச்சினை போன்ற காரணங்களால் அவர் இனி மேல் தெலுங்குப் படங்களில் மட்டுமே நடிப்பார். தமிழுக்கு வர மாட்டார் என்று கூறப்பட்டு வந்தநிலையில், சுராஜ் இயக்கும் ஜெயம் ரவி படத்தின் மூலம் மீண்டும் தமிழுக்கு வந்திருக்கிறார் அஞ்சலி.

இந்தப் படத்தில் கிராமத்துப் பெண்ணாக நடிக்கிறார் அஞ்சலி. இதே படத்தில் இன்னொரு நாகரிக நடிகையைத் தேடி வந்தவர்கள், மெட்ராஸ் படத்தில் நடித்துள்ள கேத்ரின் தெரசாவை நடிக்க வைக்க முடிவு செய்திருந்தனர். ஆனால், அது மிகவும் கனமான வேடம். தமிழில் இன்னும் கேத்ரின் தெரசா நடித்த படமே வெளியாகாத நிலையில், அவரை நம்பி சிறந்த வேடத்தை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தவர்கள் இப்போது அந்த படத்துக்கு த்ரிஷாவை சேர்த்துள்ளார்கள்.

ஏற்கனவே ஜெயம்ரவியுடன் பூலோகம் படத்தில் த்ரிஷா நடித்திருப்பதால் அவருக்கு இந்த வாய்ப்பு எளிதில் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இப்படி எதிர்பாராத விதமாக த்ரிஷா அப்படத்தில் ஒப்பந்தமாகியிருப்பதால் பலத்த அதிர்ச்சியில் இருக்கிறார் அஞ்சலி. காரணம், அவர் தன்னை விட பெரிய நடிகை என்பதோடு பொறுப்பான வேடத்தில் நடிப்பதால், ஏற்கனவே தான் த்ரிஷாவுடன் நடித்த மங்காத்தா படத்தைப்போன்று இந்த படத்திலும் அவரே முக்கிய நாயகியாகி தன்னை ஓரங்கட்டி விடுவாரோ என்று கடும் கலவரத்தில் இருக்கிறார் அஞ்சலி.



மீராஜஸ்மின்

## தெலுங்கில் சூர்யா?

சூர்யா நடித்து விரைவில் வெளிவர இருக்கும் 'அஞ்சான்' படமும் தெலுங்கில் 'சிக்கந்தர்' என்ற பெயரில் மாற்றஞ்செய்யப்பட்டு வெளியாக உள்ளது. இதையடுத்து சூர்யா நேரடி தெலுங்குப் படம் ஒன்றில் நடிக்கவிருக்கிறாராம். அந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் யார் என்பதும் முடிவாகியுள்ளது. இந்தப் படத்தை அநேகமாக ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கலாம் என தெலுங்கில் தெரிவிக்கிறார்கள்.

## உடல் உறுப்புக்களை தானம் செய்யத் தயாராகின்றார் அசின்



தனது உடல் உறுப்புகள் அனைத்தையும் தானம் செ
நடிகை அசின் தெரிவித்துள்ளார். தமிழில் உச்சத்திலிருந்
இந்தியில் நடிக்கப் போய்விட்டவர் அசின். அ
ஆரம்பம் அமர்க்களமாக இருந்தாலும், போகப் போக
ஆரம்பித்துவிட்டது. இப்போது ஹிந்தியில் அபிஷேக் ப
'ஆல் இஸ் வெல்' படத்தில் மட்டும் நடித்துக் கொண்டி
படங்களில் மீண்டும் நடிக்க ஆர்வம் காட்ட ஆரம்பித்து
கதை கேட்கவும் தொடங்கிவிட்டாராம்.

ஆனால் தமிழுக்கு வர கொஞ்சம் தயக்கமாகவும் உள்
இலங்கைத் தொடர்புகள் விஷயத்தில் இங்குள்ள தமி
இன்னும் சமாதானமாகவில்லை. எனவே அவர் நடி
செய்தி வந்தால் நிச்சயம் எதிர்ப்பு காட்ட ஆரம்பிப்பார்க
இன்னொரு புறம் சமூக சேவை பணியிலும் ஆர்வ
றார் அசின். ஏழை மாணவ-மாணவிகளுக்கு க
வழங்குகிறாராம். சமீபத்தில் மும்பையில் இரத்ததான
இதை ஆரம்பித்து வைக்க அசினை அழைத்திருந்தன
அசினும் இரத்த தானம் செய்தார். அத்துடன் தனது
உடல் உறுப்புகளை தானம் செய்யவும் முடிவு செய்துள்
உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்திட்டுள்ளதாக தகவ
இதனை அசினும் உறுதிப்படுத்தினார்.

## ஜித்தன் இரண்டாம் பாகம்

2005ஆம் ஆண்டு ரமேஷ், பூஜா, சரத்குமார் ஆ
வெளியாகிய 'ஜித்தன்" அனைவரிடமும் வரவேற்பைப்
இதனால், ரமேஷின் பெயருக்கு முன்னால் 'ஜித்தன்'
பெயரும் சேர்ந்து கொண்டது. தற்போது இப்படத்
பாகம் தயாராகி வருகிறது. 'ஜித்தன்" ரமேஷ் கதாநாய
இப்படத்தில் இரண்டு நாயகி கள் நடிக்கின்றனர். மு
விளம்ப
இவர்க
இது மு
குறிப்பி

## கதை, திரைக்கதை, வசனம் இயக்கம் படத்தில் சினிமாப் பட்டாளங்கள்

பார்த்திபன் இயக்கியுள்ள கதை திரைக்கதை வசனம் இயக்கம் படத்தில் பிரகாஷ்ராஜ், விஷால், ஆர்யா, விஜய்சேதுபதி, அமலா-பால், டாப்சி என பலர் நடித்துள்ளனர். அதாவது கதைப்படி இதில் இயக்குநராக நடித்துள்ளார் தம்பி ராமையா. வடிவேலு நடித்த இந்திரலோகத்தில் நா.அழகப்பன் படத்தை இயக்கியவர் இவர். இந்த படத்தில் இயக்குநராகவே நடித்திருக்கிறார். அவர் இயக்கும் படத்தில்தான் இந்த நட்சத்திர பட்டாளங்கள் நடிக்கிறார்களாம். இவர்கள் அனைவருக்குமே ஒருநாள் அல்லது இரண்டு நாள் மட்டுமே படப்பிடிப்பு இருந்ததாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தானம் செய்யப் போவதாக
ச்சத்திலிருந்த நேரத்திலேயே
அசின். அங்கு அவருக்கு
பாகப் போக மவுசு குறைய
அபிஷேக் பச்சன் ஜோடியாக
க கொண்டிருக்கிறார். தமிழ்
ஆரம்பித்துள்ளார். சிலரிடம்

கவும் உள்ளதாம். அசினின்
ள்ள தமிழ் அமைப்புகள்
அவர் நடிக்கப் போவதாக
ரம்பிப்பார்கள்.
லும் ஆர்வம் காட்டி வருகி
களுக்கு கல்வி உதவிகள்
இரத்ததான முகாம் நடந்தது.
த்திருந்தனர். அங்கு சென்ற
ன் தனது கண்கள் மற்றும்
வு செய்துள்ளார். இதற்கான
ளதாக தகவல் வெளியானது.

த்குமார் ஆகியோர் நடித்து
ரவேற்பைப் பெற்றது.
ல் 'ஜித்தன்'' என்ற படத்தின்
து இப்படத்தின் இரண்டாம்
ஷ் கதாநாயகனாக நடிக்கும்
னர். மும்பையின் பிரபல
விளம்பர மொடல்களான
இவர்களுக்குத் தமிழில்
இது முதல் படம் என்பது
குறிப்பிடத்தக்கது.



# தமிழ் சினிமாவில்...

ஒரு கதாநாயகியாக 10 வருடங்கள் நிலைத்து நிற்பதே பெரும்பாடு. ஆனால் நடிகைகள் இதையும் தாண்டி பல காலம் திரையுலகிலே நிலைத்து நிற்கின்றனர்.

ஸ்ரேயா (13 வருடங்கள்) : சினிமாவில் அறிமுகமானது 2001இல் தெலுங்கில் 'இஷ்டம்' என்ற படம். ஆக 13 வருடங்கள் சினிமா வாழ்க்கை. தமிழில் இவர் அறிமுகமானது 'எனக்கு 20 உனக்கு 18'. ஆண்டு 2003. தமிழில் அறிமுகமாகியே, அம்மணிக்கு 11 வருடங்கள் ஆகிவிட்டன.

த்ரிஷா (15 வருடங்கள்) : 1999இல் வெளிவந்த 'ஜோடி' படத்தில் சிம்ரனின் தோழியாக திரையுலகுக்கு வந்த த்ரிஷா, சினிமாவுக்கு வந்து 15 ஆண்டுகள் ஆகின்றன. கதாநாயகியாக 'மௌனம் பேசியதே' (ஆண்டு 2002 இல்வெளிவந்த படத்தில்)

நயன்தாரா (11 வருடங்கள்) : தமிழில் ஹரியின் 'ஐயா' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக 2005ஆம் ஆண்டில் அறிமுகமானாலும் மலையாளத்தில் 'மனசினக்கெரெ' படத்தில் 2003 இலேயே ஜெயராமுடன் அறிமுகமானார் டயானா மரியம் குரியன் (எ) நயன்தாரா. இடையில் சிம்பு, பிரபுதேவா, ஆர்யா என எந்த விவகாரமும் இவருடைய திரை வாழ்க்கைக்கு முட்டுக் கட்டைபோடவில்லை.

தமன்னா (9 வருடங்கள்): தெலுங்கிலும் தமிழிலும் மாறி மாறி சினிமா சவாரி செய்யும் தமன்னா, ஒட்டுமொத்த சினிமா வாழ்க்கையை எடுத்துக்கொண்டால் 9 வருடங்கள், தமிழில் 'கேடி'யில் (2006) அறிமுகமானதில் இருந்து கணக்கெடுத்தால், எட்டு வருடங்கள்.

அனுஷ்கா (9 வருடங்கள்) : 2005 இல் 'சூப்பர்' என்ற தெலுங்குப் படத்தில் நாகார்ஜுனாவை ஒருதலையாகக் காதலித்து அறிமுகமானார் இந்த யோகா ஆசிரியர். நடித்த பல படங்கள் வெற்றிபெற தெலுங்கில் பெரிய நாயகர்கள் அனைவரின் தெரிவாக மாறினார். உயரமும் ஆளுமையும் நடிகையின் திரையுலகிற்கு வித்திட்டன. தமிழில் மாதவனுக்கு ஜோடியாக 'ரெண்டு' படத்தில் 2006இல் அறிமுகம். சினிமா வாழ்க்கை 9 ஆண்டுகள்.

அஞ்சலி (7 வருடங்கள்) : 'கற்றது தமிழ்' படத்தில் 2007இல் நமக்கு அறிமுகமான அஞ்சலி 2006இல் 'போட்டோ' என்ற தெலுங்குப் படத்தில் குட்டி வேடத்தில் அறிமுகமானார், என்றாலும் கதாநாயகி என்ற கணக்குப்படி ஏழு வருடங்கள்.

ஆண்ட்ரியா (7 வருடங்கள்) : முழு நேர நடிகையாக இல்லாவிட்டாலும் பாடகியாக, நாட்டியக் காரியாக, பின்னணிக் குரல் கொடுப்பவராக என்று பல முகங்களுடன் அறிமுகமானவர். 2007இல் 'பச்சைக்கிளி முத்துச்சரம்' படத்தில் சரத்தின் ஜோடியாக, கதாநாயகியாக அறிமுகம். ஆனால் 2005இல் 'கண்ட நாள் முதல்' திரைப்படத்தில் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தால் மட்டுமே தெரியக்கூடிய அளவுக்கு ஒரு சின்னஞ்சிறிய பாத்திரத்தில் நடித்திருக்கிறாராம். ஆனால், ஹிந்தி நடிகைகளின் பட்டியலைப் பார்த்தால், நம் ஊர் நடிகைகள் எவ்வளவோ பரவாயில்லை என்று சொல்வீர்கள்.

கரீனா கபூர் (14 வருடங்கள்) : 2000இல் 'ரெஃப்யூஜி' படத்தில் அறிமுகமாகி வரிசையாக வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் கரீனா. கரீஷ்மா கபூரின் தங்கை என்ற அடையாளத்துடன் நுழைந்தாலும் இன்றைக்கு அவர்கள் இருவரில் ரசிகனின் முதல் தெரிவு கரீனாதான்.

பிரியங்கா சோப்ரா (12 வருடங்கள்) : 2002இல் 'தமிழன்' என்ற படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடித்து அறிமுகமானார். முதல் படம் பப்படம் ஆனாலும் இந்தியில் கவனம் செலுத்தத் தொடங்கி பல படங்கள் அதிரடி வெற்றியாக அமைந்தன. இன்றைக்கும் இந்தி நடிகர்களின் தெரிவில் முதன் நிலை நாயகியாக இருக்கிறார்.

கத்ரீனா கைஃப் (11 வருடங்கள்) : 2003ஆம் ஆண்டு 'பூம்' என்றபடுதோல்விப் படத்தில் மூன்று கதாநாயகிகளில் ஒருவராக அறிமுகமானாலும் இப்போது இந்தியாவில் அதிகமான சம்பளம் வாங்கும் நடிகை என்ற பெயரைத் தட்டியவர் கத்ரீனா.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிவாசிகள் நெருப்பைச் சுற்றி ஆடு வதை நீங்கள் திரைப்படங்களில் பார்த்திருக்கக் கூடும். அது தெய்வமாகிய நெருப்பை சாட்சியாக வைத்து ஆடும் நடனம். அப்படி பல் வேறு வகையான இசைப் பாரம்பரியங்கள் உலகெங்கும் உண்டு. மேட்டுக் குடிக்கும் உண்டு. தாழ்த்தப்பட்டோருக்கும் உண்டு. டைட்டானிக் படத்தில் இந்த மேட்டுக் குடி பம்மாத்துகளுக்கும் எளிய மக்களின் கொண்டாட்டத்துக்கும் ஒரு அருமையான உதாரணம் உண்டு. கதாநாயகன் ஜாக் கதாநாயகி றோசை காப்பாற்றுவான், அதற்காக அவளுக்கு நிச்சயம் செய்திருக்கும் மாப்பிள்ளை அவனை விருந்துக்கு அழைப்பான். அப்போது மேட்டுக் குடியின் உணவுக் கலாசாரம் மற்றும் விருந்து என்பன

டைஐயோனியன் இதற்கு எதிர்மாறானது. உடலின் ஒவ்வொரு தசையையும் ஆட வைக்கும் ஒரு பிரபஞ்ச இசை. அது மனிதர்களை, தங்களை மறந்து ஆட வைப்பது. பறை இரண்டாம் வகை. ஆனால், நமது சமூகத்திலோ பறை வாசிப்பவர்களை அவர்களது வாத்தியத்தை குறியீடாக்கி சாதிப் பெயராக இழிவுபடுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பறையை அடிக்கும்போது ஆடத் தோன்றாதவர்களே இல்லை. மரணத்தைக் கூட கொண்டாட்டமாக்கும் இசையை சிருஷ்டிப்பவர்களை நாம் தீண்டத்தகாதவர்கள் ஆக ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பாடல் முயற்சிகள்

லோருக்கும் 'ஈசியா' வாறது இது தான். "தமிழ் உணர்வு வேற அப்ப அப்ப பொங்கும்." இதில் இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அப்படி ரசனை கெட்ட சமூகத்தில் தான் நாம்

> நான் விரும்புவது அமைதியை. அதுவே எல்லாவற்றுக்கும் மேலானது. என் கிதார் நரம்புகளின் வழியே துக்கமும் சந்தோஷமும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் வழியே இதயத்தை துளைக்கும் பாடல்கள் வந்து கொண்டிருக்கின்றன; நாமே நம்மை பார்த்துக் கொள்வதினின்றும் விலகி, இந்த உலகை புதிய கண்களால் பார்க்க உதவும் சில கவிதை வரிகளும் அதன் வழியே வந்து கொண்டிருக்கின்றன"

வாழ்ந்து கொண்டிருக்கிறோம், வேறு என்ன தான் சொல்ல?

விக்தர் ஹாரா என்ற சீலே நாட்டுப் பாடகர் ஒருமுறை இப்படி சொன்னார்,

வழியே வந்து கொண்டிருக்கின்றன"

*- கலகம் காதல் இசை (சாரு நிவேதிதா)*

இப்படிச் சொல்லும் ஒருவர் தானும் இங்கே கிடைக்காமல் போனது நமது துரதிர்ஷ்டம் தான். துரதிர்ஷ்டம் என்பது ஒரு தொற்று நோய் என்று தாஸ்தவேஸ்கி சொன்னது போல். இன்றைய படைப்பாளிகள் வாய்த்திருக்கிறார்கள். அவர்களின் உலகம் தென்னிந்தியாவோடு நின்று விட்டது. இன்னும் ஏதாவது எழுதினால், படைப்புச் சுதந்திரம் அது இதென்று கதைக்கத் தொடங்கி விடுவார்கள்.

சரி, டால் டிக்கி டமால் கதைக்கு வருவோம். மாலை வேளைகளில் சூரியன் பழுத்து பூமியே சிவப்பாக

வேண்டும் போலிருந்தது. அப்படி ஒரு வாசிப்பு, அப்படி ஒரு கிரகிப்பு. அதை மீண்டும் நினைவிலிருந்து அப்படியே, வாயாலும் டின்களிலும் வாசிக்கும் இவர்களை கடந்த பத்தியில் நான் சாத்தான் என்றேன். ஆனால், டிக்கி கேட்ட ஒரு கேள்வி, இவர்கள் தேவ தூதர்களோ என்று என் கண்களை பனிக்க வைத்துவிட்டது. ஒரு சின்ன கேள்விதான், ஆனால், இந்த ஊரின் கோயில்களுக்கோ, பாட்டு கோஷ்டி வைக்கும் ஊடகங்களுக்கோ இல்லாத இங்கிதம் அவன் கேள்வியில் இருந்தது. அவன் கேட்டது இவ்வளவுதான், "அண்ணை, எழுதிக் கொண்டிருக்கிறியள், குழப்பிறமா? நிப்பாட்டட்டுமா?"

நான், "நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன், நல்லா இருக்குது தொடர்ந்து வாசியுங்கோ" என்றேன்.

இரவு நடக்கப் போகும்

# கொண்டாட்டத்தின் இசை

"என்னைச் சுற்றிலும் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து நான் மிகவும் வேதனைப் படுகிறேன்.

என் தேசத்தின் வறுமை, உலகின் பல்வர் பகுதி மக்

மாறும்போது வருவார்கள், உடைந்த டின்கள், ரப்பர் வாளிகள் சகிதம். பின்னர் டின்களில் அடிப்பார்கள், வாயால் கத்துவார்கள்.

மெகா பிளாஸ்ட் போன்ற நிகழ்வுகளுக்கு, நூலகங்களுக்கு பக்கத்தில் காலையிலிருந்தே பாடல் போட்டு,



- கிரிஷாந்

எவ்வளவு போலியான வெற்றுப் பம்மாத்து என்பதைக் காட்டுவார்கள். பின் ஜாக், றோசை, தனது தளத்துக்கு (மூன்றாம் தர பயணிகள் இருக்கும் இடம்) அழைத்துச் செல்வான். அங்கே, ஆடலும் பாடலும் குடியும் கூத்தும் ஒரு வகை பித்த நிலையில் இருக்கும். அங்கே யாரும் ஆடாமல் இருக்க முடியாது. அந்த இசை அப்படி. அந்த மக்கள் அப்படி. அப்படிப்பட்டதே உண்மையான கொண்டாட்டம், கொண்டாட்டத்தில் வெட்கம் இல்லை. துயரம் இல்லை, போலித்தனம் இல்லை, அங்கே நீங்களே கூட இல்லை. கொண்டாட்டத்தில் நீங்கள் ஆடலும் பாடலும் உன்மத்தமும் தான்.

பெரும்பாலும் எளிய மக்களின் இசை, கையில் கிடைக்கும் சிறிய மத்தளங்களும் நரம்புக் கருவிகளும், வாய்ப்பாட்டும் தான். இப்படி இயற்கையின் அமைப்பிலிருந்தே உருவாகும் இந்த வகை இசை ஒரு வகை ஓர்கானிக் தன்மை கொண்டது. அதனால், அதுதான் அதற்கு அப்படி ஒரு வசியமும் ஈர்ப்பும் இருக்கிறது. மரண வீடுகளில் வாசிக்கும் பறை எனப்படும் வாத்தியக் கருவி டையோனியன் வகையைச் சேர்ந்தது. பொதுவாக இசைக் கருவிகள் தரும் அனுபவத்தைப் பொறுத்து அதை இரண்டாகப் பிரிக்கலாம். அப்பலோனியன் என்பது, இசையை ஒரு ஆன்மீக மற்றும் தனிமனித அகம் சார்ந்த எழுச்சியாக மாற்றுவது. ஒரு தியானம் மாதிரி.

பொதுவாகவே வரவேற்புக்குரியவை. ஆனால், சின்னச் சின்ன சமூக அக்கறை கொண்டவையாக அவை இருப்பது கவலையாக இருக்கிறது. பாடலைக் கேட்டு விட்டு ஒருத்தன் திருந்தினாலும் போதும் என்று வெற்று ஜால் ஜாப்புகளை கூறிக் கொண்டிருக்கிறார்கள் படைப்பாளிகள். இசை என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வந்தது, வருகிறது. அது புரட்சியை ஏற்படுத்துகிறது. அல்லது குறைந்தபட்சம் கொண்டாட்டத்தை வலியுறுத்துகிறது. ஆனால் இங்கு ஒரே அழுகுணிப் பாப்பா கதை தான். சமூகம் திருந்த வேணும். காதல் லீலைகள் என்று ஒரே புலம்பல். இதில் இந்தக் காதல் பாடல்கள் இருக்கிறதே, கடவுளே! எல்

களின் வறுமை, வார்ஸாவில் யூதர்களுக்காக எழுப்பப்பட்டிருக்கும் நினைவுச் சின்னங்கள், வெடிகுண்டுகளால் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் திகில் போரின் காரணமாக மனித குலத்திற்கு ஏற்பட்டிருக்கும் துயரம். ஆனால் இவ்வளவுக்கும் இடையிலும் அன்பின் வலிமையை நான் கொண்டிருக்கிறேன்.

நான் விரும்புவது அமைதியை. அதுவே எல்லாவற்றுக்கும் மேலானது. என் கிதார் நரம்புகளின் வழியே துக்கமும் சந்தோஷமும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் வழியே இதயத்தை துளைக்கும் பாடல்கள் வந்து கொண்டிருக்கின்றன; நாமே நம்மை பார்த்துக் கொள்வதினின்றும் விலகி, இந்த உலகை புதிய கண்களால் பார்க்க உதவும் சில கவிதை வரிகளும் அதன்

உற்றுக் கேட்டால், மெல்ல மெல்ல ஒரு தாளத்தை உணரலாம். அவர்களின் வெற்றுக் கத்தல்களில் ஒரு ஒருங்கி

> கொண்டாட்டத்தில் வெட்கம் இல்லை. துயரம் இல்லை, போலித்தனம் இல்லை, அங்கே நீங்களே கூட இல்லை. கொண்டாட்டத்தில் நீங்கள் ஆடலும் பாடலும் உன்மத்தமும் தான்.

ணைவைக் கேட்கலாம். கோயில்களில் சாமியை உள்ளே கொண்டு போகும் போது வாசிக்கும் நாதஸ்வரத்தை டமால் வாயாலேயே வாசித்தான். டிக்கி எழுந்து ஆடினான். பின்னர் ஐயப்பன் பாடலொன்று. பின்னர் மாரியம்மா. கொஞ்சம் கொஞ்சமாக வெறியேறி உச்சத்தை அடைந்தார்கள். நான் எழுதிக் கொண்டிருந்தேன், எனக்கே எழுந்து ஆட

இம்சை கொடுக்கும் சிலகனவான்களுக்கு டிக்கியின் அளவுக்கு கூட பிறர் மீதான நேசிப்பு இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால், டிக்கியின் இசை கொண்டாட்டம். அதுபோக தனது கொண்டாட்டத்தின் சுதந்திரம் அவனுக்கு தெரிந்திருக்கிறது. அவன் போன்றவர்களுக்கே இசை ஒரு கொண்டாட்டம். மற்றவர்களுக்கு அது ஒரு பிழைப்பு. அவ்வளவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் ஊற்று -08

## நீரைத்தேடி

கதிரவனின் வெப்பத்தால்
கருகி விழும் மரஞ்செடிகள்
காய்ந்து போகும்
கிணறுகள் காணியில்
நீர் இன்றி கங்கை தேடும்
மனிதர்கள் களைத்துப்
போன மேனிக்கு
நீர்பட்டு எத்தனை
நாளாயிற்று
இந்திரனிற்கு தூது சொல்ல
கிளம்பிவிட்டான் நம்மவன்
இவன்

கி.அகிலன்,
கனகாம்பிகைக்குளம்

## ஏழைகளின் நாயகன்

ஏழைகளின் நாயகனாம்
இரண்டு சில்லு வாகனமாம்
காலை வாரி விடமாட்டான்
கவனமாக பாவித்தால்
பெற்றோல் தேவையில்லை
ஒயிலும் வேண்டாமே
உந்தி உழக்கினாலே
ஊர் போய் சேர்ந்திடலாம்
நவீனயுகம் எனினும்
நம்பி நீ வாங்கு
நடுவழியில் நிக்கமாட்டான்
நன்றாய் உழைத்திடுவான்.

சு. தமிழிசை,
தர்மபுரம்.

## நீ தேடுவது

அலைகடலின் ஓரத்திலே
யாருமற்ற நேரத்திலே
கூனி நீ தேடுவது
இழந்த உந்தன்
இளமையையா?
கலைந்து போகும்
கலாசாரத்தையா?
மறைந்த போரில்
இறந்தோரையா?
எதைத் தொலைத்தாய்
இவ்விடத்தில்

அ.பத்மினி,
மிருசுவில்.

## வறுமை ஒழியது

என்னவளே...!
எங்கே போகிறாய்
உனது பாதைகள்
இருட்டடிப்பில்...!
வெளிச்சமென...
நீ நினைப்பது கூட
உனை நிர்மூலமாக்க
காத்திருக்கும்
நினைவிலிருந்து...
அதிவேகம் மரணத்தை
ஏற்படுத்தும்...
அறி... அச்சப்படாதே...
நிச்சயம் நீ சிகரம் தொடுவாய்...
முன்னேறு...!

எஸ். கௌதம்,
தர்மபுரம்.

## ஓடு விரைவாக ஓடு

மாலை நேரமாகி விட்டது
வானமோ மழை மேகத்தால்
சூழ்ந்து விட்டது
சுழன்று அடிக்கும் காற்று வீசுகிறது
வேலைக்கு காலை போய்
மாலை திரும்பும் உன்
பையினுள் ஒன்றுமே இல்லை
கிடைக்கும் ஒரு நேர கஞ்சி கூட
இன்று கிடையாமல் போகும் போல
ஆனால் உன் குடும்பம் இன்று
நிம்மதியாய் தூங்கும்
ஏனென்றால் அப்பா
காணாமல் போகாமல்
வீடு திரும்பியதால்

ஜெ.ஜெயரூபன்,
அரியாலை.



## தூன்பம்

மழையோ இடியோ
புயலோ இருளோ
மின்னலோ எல்லாம்
எங்களுக்கு தூசுதான்
மழையே பொறுத்திடு
கொஞ்சம் கோதுமைமா
கொண்டு செல்கிறேன்
உணவுக்காக
இரக்கம் அற்ற மனிதர்கள்
போல் மனதில்
ஈரமில்லாமல்
பொழிந்திடுவாயா?

பே.உ. மாசுதன்,
அல்வாய்

## உழைப்பாளி

வேலை முடிந்து
வீடு திரும்பும்- இவனின்
மனதின் சோகம்
இருள் சூழ்ந்த
பாதையில் தெரிகிறது
ஒரு சாண் வயிற்றுக்காக
பட்டினி போடாமல்
உழைப்பின் பணத்தை
கொண்டு போய் கொடுப்பானா?
இரவில் தூங்க முன்
வீட்டில் உள்ளவர்களிடம்.

வி. அருள்ராஜா,
வவுனிக்குளம்.

## தண்ணீர்ப் போத்தல்

இருள் சூளும்
இந்த வேளையில்
அவசரமேன் -உனக்கு
"தண்ணீர்ப் போத்தல்களுக்கும்"
தட்டுப்பாடு வந்து விடும் என
நினைதது்த்தானே?
இந்த அசுர வேகம்
எடுத்தாய்?

ந.நிரூதா,
உரும்பிராய்.

## குடும்ப வறுமை போக்க

பல இடர்பாடுகளைத் தாண்டி
பல தூரம் பயணம் செய்து
உனது குடும்ப வறுமை போக்க
உன்னால் முடிந்தளவு
உழைப்பதற்கு
உடனேயே
புறப்பட்டு விட்டாயா?

நா. டர்சிகா,
சங்கானை

## வணங்குவோம்

காற்றோ மழையோ
எதுவென்றாலும்
உழைப்பே வாழ்வுக்கு
செழிப்பென்ற நினைவோடு
புயலாய்ப் பறப்பவனே!
உழைப்பின் செழுமையில் தான்
வீட்டில் அடுப்பெரியுமென்ற
நினைவில் ஏங்குமுன்
உண்மை உழைப்புக்கு
தலை வணங்குவோம்

வ.ச. செல்வராசா,
திருநாவலூர்.

## தலையிடிகள்

பெற்றோரும் உற்றோரும்
போய்விட்ட பின்பு
தனிமை தொடர்கிறது
தவிப்பு நிலைக்கிறது

'காசு பணம் கூடிய
மனித வாழ்க்கை
நாறுகிறது
ஒன்றுமில்லாத
இவனிடத்தில்
தலையில் இடி
விழுகிறது

வே.வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

## ஏக்கம்

சைக்கிளில்
நான் என்
சொந்த ஊரைப்
பார்க்கப் போகிறேன்
என் வாழ்க்கையின்
இறுதிக் காலமாவது
அங்கு
கழியட்டும்

சு. ஜெயரூபன்
பருத்தித்துறை

## கலப்பற்று

கவனம் மகனே!
கவனம்!
வீதியில்
வாகனங்கள்
பல வரக்கூடும்
உன் வேகத்தைக்
குறைத்து
உன்னையே நீ
காப்பாற்றிக் கொள்

[illegible]

# கவிதைப்பூங்கா

## அம்மா

உதிரத்தை பால்- ஆக்கி
உயிர் வாழ வைத்து
இரவு பகல் கண்விழித்து
எமக்காக உருகும்
மெழுகுவர்த்தி

த.ஜெயந்தன்,
தர்மபுரம்

## தாய்மண்

உயிருக்கு உயிராக
என்னை நேசிக்கும் -நீ
உயிர் நீத்த போதும்
அடைகாப்பாய்....

த.பருத்திதாசன்.



## எச்சரிக்கை

இஸ்ரேல் பிசாசுகள்
குருதி குடித்துவிட்டு
துப்பும் காஸா உறவுகளின்
உடலங்களுக்காக
தவமிருக்கும்
கழுகாரே!

நேற்றைய தகவல்
நெஞ்சைத் தைக்கிறதோ?
ஒரு நாள் உன் கதியும்
இது தான் என்று
உறுதி மொழி தருகிறேன்...
எண்ணிக் கொள்!
என் உறவுகளின்
சடலங்களை அல்ல...!!
உன் இருப்பின் நாள்களை

ஏ.பாரிஸ்,
கட்டுக்கெலியாவ

## தொலைபேசிக் காதலி

அன்பே!
உன் உயிர் உள்ளவரை
நான் உனக்குத்தான்
என்று கூறிய என்னவள்
ஒரு போதும் சொல்லவில்லை
ஏன் உயிர் உள்ள வரை
நீ எனக்குத் தான் என்று!

எஸ்.கௌதம்,
தர்மபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்குடைபட்ட இந்தியா




இந்தியா -இங்கிலாந்து 4ஆவது டெஸ்ட் போட்டி முடிந்த கணம். ஆட்ட நாயகன் விருதை அறிவிக்கிறார்கள். விருதுக்கு உரியவரான ஸ்டுவர்ட் பிராட் அதை வாங்கிக்கொள்ள வரவில்லை. அவர் மருத்துவமனைக்குப் போயிருந்தார். அவர் சார்பில் அவரது அணியின் தலைவர் அலஸ்டர் குக் பெற்றுக்கொள்கிறார். வருண் ஆரோன் வீசிய ஆக்ரோஷமான எகிறு பந்து பிராடின் மூக்கை உடைத்துவிட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவரால் அன்று முழுவதும் மீண்டும் மைதானத்துக்கு வர முடியவில்லை.

ஆனால் மூக்குடைபட்ட மேலும் 11 பேர் அங்கே இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் தலைகள் கவிழ்ந்திருந்தன. இங்கிலாந்தின் அன்றைய வானத்தை விடவும் அந்தப் பதினொரு பேரின் முகங்களும் இருண்டிருந்தன.

ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் என்னும் கௌரவத்தை மிக இளம் வயதில் பெற்ற இந்த அணியினர் அடுத்த வாரம் தெற்கு லண்டனில் உள்ள ஓவல் மைதானத்திற்கு இந்த மழை மேகங்கள் வராதா என்று ஏங்கியவர்கள்போலக் காட்சியளித்தனர். ஐந்து நாள்கள் நடக்க வேண்டிய போட்டியில் மூன்றே நாள்களில் தோற்றுப்போன இவர்கள் போராட்டம், சவாலை எதிர்கொள்ளல், உறுதி, சூழலுக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளுதல்ஆகிய சொற்களை மறந்துவிட்டவர்கள்போலக் காட்சியளித்தார்கள்.

**என்னவென்று சொல்வது?**

இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்ஸில் இந்தியா பெற்ற வெற்றி பெருமைக்குரியதுதான். அத்தகைய வெற்றியைப் பெற்ற எந்த ஒரு அணியும் அந்த வெற்றியிலிருந்து உத்வேகம் பெற்று மேலும் சிறப்பாக ஆடும் முனைப்பைப் பெற்றிருக்கும். ஆனால் இந்திய அணி பெற்றதோ மோசமான தோல்வியை.

தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் திறன் கொண்ட அணியென்றால் சுதாகரித்துக் கொண்டு தன் சிறந்த திறமைகளை வெளிப் படுத்தியிருக்கும். ஆனால் இந்திய அணியோ மற்றொரு மோசமான தோல்வியைப் பெற்றிருக்கிறது.

வெற்றி, தோல்வி இரண்டி லுமிருந்து உத்வேகமோ, பாடமோ பெறத் தெரியாத இந்த அணியை என்னவென்று சொல்ல?

வேகப் பந்து வீச்சை ஆடத் தெரியாதவர்கள் அல்ல இந்த இளைஞர்கள். தென்னாபிரிக்காவி லும் நியூஸிலாந்திலும் இதை நிரூபித்தார்கள். சுழல்பந்தை ஆடத் தெரியும் என்பதையும் பல முறை நிரூபித்திருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்து ஆடுகளங்களில் ஸ்விங் ஆகும் பந்துகளை ஆடுவதில் தங்களுக்கு விவரம் போதாது என்பதை இப்போது நிரூபித்திருக் கிறார்கள். எதிர் மறையான சூழல் அமையும் போது சுமாரான சுழல் பந்தைக்கூடச் சமாளிக்க முடியாது என்பதையும் நிரூபித்திருக்கிறார்கள்.

**மோசமான தோல்வி**

பந்தை நன்கு எகிறவைக்கும் தன்மையோ சுழலுக்கு உதவும் தன்மையோ அற்ற தட்டையான ஆடுகளத்தில் மட்டுமே இந்திய மட்டையாளர்கள் தொந்தரவில்லாமல் ஆடினார்கள்.

அடுத்த போட்டியில் பந்து வீச்சுக்கு உதவி புரியும் ஆடுகளத்தில் முரளி விஜய், அஜிங்க்ய ரஹானே, ஸ்டூவர்ட் பின்னி, புவனேஸ்வர் குமார் ஆகியோரின் நேர்த்தியான மட்டையாட்டங்கள் இந்தியாவைக் கரைசேர்த்தன. அதிக ஸ்விங் ஆன மூன்றாவது மற்றும் நான்காவது டெஸ்ட்களில் இந்தியா மோசமாக அல்ல, மிக மோசமாக ஆடியது. நன்றாக ஆடிக்கொண்டிருந்த விஜய், ரஹானே முதலானோரும் சறுக்கினார்கள்.

இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 313 ஓட்டங்கள் எடுக்கும் ஒரு அணியைக் காப்பாற்ற வேண்டுமென்றால் உலகிலேயே சிறந்த பந்து வீச்சாளர்கள் வேண்டும். அல்லது தொடர்ந்து நான்கு நாட்களுக்கு மழை பெய்ய வேண்டும். இரண்டும் இந்தியாவுக்கு அமையவில்லை.

நான்காவது டெஸ்டில் அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அவை எதுவுமே பலனளிக்கவில்லை. மட்டையாளர்களால் இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக 100 ஓவர்கள்கூட ஆட முடியாத நிலையில் பந்து வீச்சில் மேற்கொள்ளும் மாற்றங்கள் எந்தப் பலனையும் விளைவித்துவிடப் போவதில்லை.

**சுதாகரிக்குமா இந்தியா?**

ஸ்விங் ஆகும் பந்துகளுக்குப் பேர்போன இங்கிலாந்தில் இந்திய மட்டையாளர்கள் பலரும் சிறப்பாக ஆடியிருக்கிறார்கள்.

முன்னணி மட்டையாளர்களைப் போலத் தொழில்நுட்ப நேர்த்தி அற்ற கபில்தேவ், வீரேந்திர சேவாக் போன்றவர்கள் தங்களுக்கே உரிய அலாதியான உத்திகளின் மூலம் இங்கே ஓட்டங்கள் எடுத்திருக்கிறார்கள். கிரீஸுக்குள் ஆணி அடித்தது போல நின்றுகொண்டு பந்துகளைத் தயக்கத்துடன் முத்தமிட்டுக்கொண் டிருப்பது மட்டையாட்டம் அல்ல. தற்கொலை ஆட்டம். அதைத்தான் கோஹ்லி இங்கிலாந்தில் செய்துவருகிறார்.

தவானும், கம்பீரும் எந்தப் பந்தை விடுவது என்பது பற்றிய திட்டம் எதுவும் இல்லாமல் ஆடுகிறார்கள். புஜாராவின் ஆட்டத்தில் பெரும் தயக்கம் தெரிகிறது. ஸ்விங் பந்துகளை ஆடிப் பழக்கமில்லை என்று சர்வதேச அரங்கில் ஆடும் ஒரு முன்னணி மட்டையாளர் சொன்னால் அது அவமானம். சுழற்பந்துகளைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்ற ஓர் அணி மொயீன் அலி போன்ற சாதாரணமானதொரு சுழற்பந்து வீச்சாளரிடம் இலக்குகளை இழக்கும் நிலைமையைத் தற்கொலை வேட்கை என்றுதான் சொல்ல முடியும்.

இந்தியாவின் புகழ்பெற்ற மட்டை வலுவின் வாரிசுகளாகப் புகழுடைய விரும்பும் ஷிகர் தவன், சதீஸ்வர் புஜாரா, விராட் கோஹ்லி, ரஹானே போன்றவர்கள் மெத்தனத்தையும் கற்றுக்கொள்ளத் தவறும் பழக்கத்தையும் விடுத்துச் சுதாகரித்துக்கொள்ளாவிட்டால் இந்திய டெஸ்ட் அணி தேற வாய்ப்பில்லை.அடுத்த போட்டியில் லோர்ட்ஸில் நடந்த அதிசயம் நடக்கலாம். போட்டியை வென்று தொடரைச் சமன் செய்யலாம்.

ஆனால் நான்காவது போட்டியில் எதிரணியிடம் பரிதாபகரமான சரணாகதி அடைந்ததன் அவமானத்தைப் போக்க இந்தியா மேலும் பல வெற்றிகளைப் பெற வேண்டியிருக் கும். மூக்கில் அடிபட்ட ஸ்டூவர்ட் பிராட் அடுத்த வாரத்துக்குள் மருத்துவமனையிலிருந்து வந்து விடுவார். மூக்குடைபட்ட இந்திய அணி சுதாகரித்துக் கொள்ளுமா?

**தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் திறன் கொண்ட அணியென்றால் சுதாகரித்துக்கொண்டு தன் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியிருக்கும். ஆனால் இந்திய அணியோ மற்றொரு மோசமான தோல்வியைப் பெற்றிருக்கிறது.**

**வெற்றி, தோல்வி இரண்டி லுமிருந்து உத்வேகமோ, பாடமோ பெறத் தெரியாத இந்த அணியை என்னவென்று சொல்ல?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

ஒரு மிகப்பெரிய நிறுவனம் தன் இணையத்தளங்களை ஒரு விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படும் வழங்கியின் மூலம் இணையத்தள சேவையினை வழங்கி வருகிறது. அதனை ஹக்கர்கள் தாக்க முற்படும் பொழுது அதன் இயங்குதளம் மற்றும் அதன் பதிப்புரு (OS Version) ஆகியவற்றினை அறிந்ததும் செய்யும் முதல் வேலை அதன் பாதுகாப்புக் குறைப்பாடுகள் என்னென்ன? அதில் எவற்றைப் பயன்படுத்தினால் என்ன மாதிரியான பயன்கள் கிடைக்கும்? என்பன போன்ற தகவல்களைத் திரட்டி தேவைக்கேற்ப செயல்படுத்துவார்கள். அந்த நிறுவனத்தின் வழங்கி யினைப் பராமரிக்கும் நபர் பிரதி மாதம் மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிடும் பாதுகாப்பு நிரல்திட்டுகளை (security patches) நிறுவாமல் இருக்கும் பட்சத்தில் நிறுவனத்தின் இணையத்தளம் சந்தி சிரிக்கவும், வழங்கியின் முழுக் கட்டுப்பாடும் ஹக்கர்களின் கைக்குச் செல்லவும் வாய்ப்புகள் பிரகாசம்.



எனவே பயன்பாட்டில் இருக்கும் மென்பொருள்களின் பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து ஏதேனும் தகவல்கள் வெளியானால் அவற்றை விரல் நுனியில் வைத்திருப்பதும், அவற்றை சரி செய்வதற்கான திட்டங்களை வரைவு செய்து செயல்படுத்துவதும் பாதுகாப்பு வல்லுநர்களின் பணிகளில் ஒன்று. பாதுகாப்புக் குறைபாடுகளைப் பற்றியோ அவற்றை உபயோகித்து வலையமைப்புகளை கட்டுடைத்து உள்நுழையும் விதம் குறித்தோ அனைத்து ஹக்கர்களும் தாங்களே சொந்தமாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடிப்பதில்லை. இணையத்தில் அது குறித்த தகவல்கள் ஏராளமாகக் கிடைக்குமென்பதால் அது அவர்களுக்கு ஒரு பிரச்சினையே இல்லை.


பாதுகாப்பு நிரல்திட்டுகளை நிறுவுவதென்பது நீச்சலடிப்பதைத் தரையில் இருந்து பார்ப்பதைப் போன்று தோன்றினாலும், ஆயிரக்கணக்கில் உலகில் பல்வேறு மூலைகளில் பரந்து விரிந்துள்ள நிறுவனங்களின் கணினிகளைப் பராமரிப்பதென்பது மனைவியைச் சமாளிப்பதினும் கடிது. அவற்றை நிறுவுவதால் வேறேதெனும் மென்பொருள் செயற்பாட்டுகளுக்குப் பாதிப்பு ஏற்படுமா, மீள் இயக்கம் (reboot) செய்ய வேண்டுமா அப்படியென்றால் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுத்துமா போன்ற பல விஷயங்களை பரிசோதித்து செயலில் இறங்க வேண்டும். பெரும்பாலும் இந்த வேலையைப் பெரும் நிறுவனங்களில் செய்யும் அன்பர்கள் இரவுக்கோழிகளாக இருப்பதைக் காண முடியும். மற்றவர்கள் அனைவரும் பணி முடிந்து சென்று மறுநாள் திரும்பி வரும் போது ஒவ்வொருவரின் கணினியும் புதிய நிரல்திட்டுகளோடு பாதுகாப்பாக இருப்பதினை உறுதி செய்யும் பணியே இவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மற்றும் பல.

முழு இரவும் ஒவ்வொரு கணினிக்கும் சென்று வேலை செய்ய வேண்டுமா என்ற சந்தேகம் தோன்றுபவர்களுக்கு, இதற்கென்றே பிரத்தியேக மென்பொருள்கள் இருக்கின்றன (endpoint management). ஒரு கணினியில் இருந்து கொண்டே அந்த வலையமைப்பில் இருக்கும் அனைத்துக் கணினிகளி லும் என்னென்ன மென்பொருள்களை/நிரல்களை நிறுவலாம், நீக்கலாம் என்பதனைக்கூடத் தீர்மானிக்க முடியும்.

இப்படி ஹக்கர்களுக்கும், பாதுகாப்பு வல்லுநர்களுக்கும் இடையேயான கள்ளன் - பொலிஸ் விளையாட்டின் வாயிலாக எத்தனை சுவராஷ்யமான அத்தியாயங்களை உலகம் கண்டிருக்கிறது. அவற்றையும் கொஞ்சம் பார்க்கலாம்

(வலை விரியும்)

# ஆனந்திப்பின் கலைஞன்



- கலைச்செல்வன் றெக்ஸி

றொபின் வில்லியம்ஸ் மறைந்துவிட்டார். ஹொலிவூட்டின் பிரபல நடிகர்களில் ஒருவரான இவருக்கு வயது 63. தமிழ் சினிமா ரசிகர்களுக்கு மிகவும் பரிச்சயமான கதாபாத்திரம் ஒளவை ஷண்முகி. இந்தப் பாத்திரம் றொபின் வில்லியம்ஸ் நடித்த Mrs. Doubtfire என்ற படத்தைத் தழுவியே கமல்ஹாசனால் உருவாக்கப்பட்டது.

பல ஹொலிவூட் படங்களில் நீண்டகாலமாக இவர் நடித்துவந்தாலும்

01.Mork in Mork / Mindy (தொலைக்காட்சித் தொடர் 4 வருடங்கள் தொடர் வெற்றியைக் கொடுத்தபாத்திரம் )

02.Daniel Hillard/ Mrs. Doubtfire in Mrs. Doubtfire ( இதனைத்தான் ஒளவை ஷண்முகி என கமல் எடுத்து வெற்றி பெற்றார் )

03.John Keating in Dead Poets Society ( இது கமலின் நம்மவரைப் போன்ற பாத்திரம். )

04.Genie in Aladdin

05.Dr. Sean Maguire in Good Will Hunting

போன்ற படங்களில் றொபின் ஏற்று நடித்த கதாபாத்திரங்களையே அவர் நடித்தவற்றுள் மிகச் சிறந்த முதல் ஐந்து பாத்தி ரம் என பிரபல பத்திரிகை யான ரைம்ஸ் கணித்துள்ளது.

தனது இளம் வயதில் மிகவும் கூச்ச சுபாவத்துடன் காணப்பட்ட இவர் காலப் போக்கில் நாடகங்களில் நடிக்கத் தொடங்கியபோது அதிலிருந்து விடுபட்டுள்ளார். ஆனால் அதிக புகழும் செல்வாக்கும் போதைக்கும் மதுவுக்கும் அடிமையாகி இறுதியில் விரக்தியான (epression) மனநிலைக்குத் தள்ளியது.

தனது வாழ்க்கையில் மூன்று திருமணங்கள் செய்து கொண்ட றொபினால் தனக்கான சரியான துணையைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதும் அவரது தோல்வியான சோகமான வாழ்க்கையை மேலும் மோசமாக்கியது.

கடந்தவாரம் தனது வீட்டில் மூர்ச்சையாகக் கிடக்கக்காணப்பட்ட அவரை சோதித்த அம்புலன்ஸ் ஊழியர்கள் அவரது மரணத்தை உறுதிப் படுத்தியுள்ளனர். அவரது மரணம் தற்கொலை எனக் கூறப்பட்ட போதிலும் இன்னும் உத்தியோக பூர்வமான மருத்துவ அறிக்கை வெளியாக வில்லை.

உலகில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களில் இயற்கையாகவே நகைச்சுவையுணர்வும் அதை நகைச்சுவையாக வெளிப்படுத்தி பார்ப்போரைச் சிரிக்க வைக்கும் அசாத்திய திறமையும் கொண்ட கலைஞர்களுக்குப் பின்னால் ஒரு சோகம் இழையோடிக்கணப்படுவது வரலாறு. இதற்கு சார்லி சப்ளின் முதல் தமிழின் சந்திரபாபு, நாகேஷ், உசிலைமணி என இந்தப் பட்டியல் நீளமானது. அந்தச் சாபம் ஹொலிவூட் நடிகர்களையும் விட்டு வைக்கவில்லை.

மனித வாழ்க்கையில் நிம்மதியையும், அமைதியையும், மகிழ்ச்சியையும், நிறைவையும், பணம், பெயர், செல்வாக்கு, புகழ் இவற்றால் மட்டும் பெற்றுவிட முடியாது என்பதற்கான இன்னொரு சோக உதாரணம் றொபின் வில்லியம்ஸ்.

உலக வாழ்க்கையில் எல்லாம் இருந்தும், மற்றயோரை தனது நகைச்சுவையால் மகிழ்ச்சிப்படுத்தியபடி தனக்குள்ளே அழுதபடியும், அமைதியின்றியும் அல்லாடிய ஒரு ஜீவன், இனியாவது அமைதியாக உறங்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 47

திருமணத்துக்கு முன், ஆண்களும் பெண்களும் தனியாகப் பிரிந்து வாழ வேண்டும் என்பது யாழ்ப்பாண இந்து சமுதாயத்தின் பழமை பேண் வாதிகளிடையே நன்கு வேரூன்றிய ஒரு பண்பாட்டுக் கோலமாகும். தமிழ் மக்களிடையே இது தொடர்பாக உள்ள இறுக்கமான உணர்வுகளை பிரபாகரன் நன்கு உணர்ந்திருந்தார். மக்களிடையே பரந்துபட்ட ஆதரவை விடுதலைப் புலிகள் தொடர்ந்து பெற வேண்டுமானால் இந்தச் சமூக பண்பாட்டு அம்சத்திற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதில் பிரபாகரன் மிகவும் அக்கறையாக இருந்தார். இது அவரது அரசியல் சாணக்கியத்தை புலப்படுத்தியது .எனினும் முன்பின் அறியாத நான்கு இளம் பெண்களுக்கு தங்க இடம் வழங்குவது இயக்கத்தின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீறுவது போல் தோன்றியது. அதே சமயம் பிரபாகரனது இல்லத்தில் அவர்களுக்கு இடம் வழங்குவது அவரது சொந்தப் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு ஏற்றதாக அமையவில்லை என்றும் கருதலாம்.

ஆனாலும் ஒரு தமிழ் மனிதனுக்கும் ஓர் அண்ணாவுக்கும் உரிய பொறுப்புணர்வோடும் ஓர் இயக்கத்தின் தலைவர் என்ற கடமையுணர்வோடும் திருமணமாகாத அந்த நான்கு இளம் பெண்களினதும் பாதுகாப்புத் தொடர்பாக அவர் கரிசனை காட்டியது வியப்புத் தருவது அல்ல. ஆனால் நாள் செல்லச், செல்ல பிரபாகரன் இந்த இளம் பெண்களோடு நன்கு பழகத் தெடங்க,இந்தமாணவிகளில் ஒருத்தி மீது அவருக்கு கூடுதலான பிடித்தம் ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. மதி (மதிவதனி) அவரு டைய இதயத்தைக் கவர்ந்திருந்தார். இது எமக்கு வியப்பைத் தரவில்லை. ஏனென்றால், மதி ஒருஅழகிய பெண்; மிகமிகமென்மையான இதயமும் இரக்கமும் கொண்டவர்; இந்து சமய ஒழுக்க சீலங்களைப் பக்தியோடு கடைப் பிடிப்பவர். விவசாய விஞ்ஞான பீட மாணவியான இவர் யாழ்ப்பாணத்தில் மாணவ ஆர்ப்பாட்டக் களத்திலிருந்து வரலாற்றுக்குள் எடுத்து வரப்பட்டு, பிரபாகரனிடமும், அது காரணமாக இயக்கத்திலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருந்தார்.



ஒரு தேசிய விடுதலை இயக்கமானது, அமைப்பு ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும், தங்கள் மக்களின் அபிலாசைகளுக்கும், நலன்களுக்கும் பொருத்தமாக உயர் சீலங்களையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று விடுதலைப்புலித் தலைவர்களும் போராளிகளும் கொண்டிருந்த கருத்துடன் பாலாவுக்கும் எனக்கும் உடன் பாடு இருந்தது. ஆனால் இந்த விதிகள் தளர்வின்றி, இறுக்கமாக இருப்பது எமக்குத் திருப்தியாக இல்லை. எம்மைப்பொறுத்த வரையிலே,விதிக்கப் பட்டிருந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகள் நடைமுறைச் சாத்தியமானவையா கவோ, மனித உணர்வுகளையும் உறவுகளையும் முதிர்ச்சியோடு புரிந்து கொண்டிருப்பவையாகவோ நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாகவோ எமக்குப் படவில்லை. ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணியாக வேண்டும் என்ற தனிப்பட்ட பிடிவாத முயற்சி தொடர்ந்தாலும் எமது கருத்துப் படி இயற்கை தனது போக்கிலே சென்று, ஆண்,பெண் இருபாலாருக்கும் இடையே உறவுகளைத் தோற்றுவிக்கும் என்று நாம் நம்பினோம். காதலின் பலமும் வேகமும் பிரபாகரனைத் தாக்கும் போது, அந்த உக்கிரமான உணர்வெழுச்சி அவரை முழுமையாக ஆகர்சிக்கும் என்பதை, பாலாவும் நானும் உணர்ந்திருந்தோம்.நாம் எதிர்பார்த்ததேதான் நடந்தது. அந்தப் பெண் மீதான காதல் அவர் இதயத்தில் பொங்கி வழிந்தது. மதி மட்டில் அவரும் அவர் மட்டில் மதியும் காதல் வயப்பட்டு ஒருவரை ஒருவர் முழுமையாக நேசித்தார்கள். இயக்கத்தினதும் போராளிகளினதும் நீண்ட கால நலன்களை நோக்கும் போது, எம்மைப் பொறுத்தவரையிலே இந்த உறவு மிகவும் முக்கியமானதாகப்பட்டதுடன் திருமணத்தில் இணைய வேண்டும் உறுதியாக நம்பினோம்.

(பதிவு தொடரும்)

# இவ்வார இராசி பலன்

13.08.2014 –19.08.2014

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

நிதானம், தியாக குணம் பின்பற்றுவதால் ஒற்றுமை சீராகும். உறவினர்களின் கூடுதல் அன்பு, உதவி மனதில் நெகிழ்ச்சி தரும். புத்திரரின் கவனக்குறைவை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவர். இல்லறத்துணை உதவிகரமாக நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலம் அக்கறையுடன் பாதுகாக்க வேண்டும். பணியாளர் தேவையற்ற வகையில் பணக்கடன் பெற வேண்டாம். பெண்கள் குடும்பத்தேவையை நிறைவேற்றுவதில் சிக்கனம் மேற்கொள்வர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

விலகிச் சென்றவரும் விரும்பி அன்பு பாராட்டுவர். வீட்டுத்தேவையை நிறைவேற்ற தாராள பணவசதி இருக்கும். புத்திரரின் எதிர்கால வாழ்வு சிறக்க. சில திட்டம் உருவாக்குவீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி. விற்பனை செழித்து வளர. புதியவர்களின் வருகை துணை நிற்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அவமானப்படுத்த முயற்சிப்பவர்களிடம் சமயோசிதமாக விலகுவீர்கள். உடன் பிறந்தவர் ஓரளவு உதவுவர். வாகனத்தில் பராமரிப்பு பயணமுறையை எளிதாக்கும். புத்திரரை விஷப்பிராணிகளிடம் விலகி பாதுகாப்பாக இருக்கச் சொல்லுங்கள். இல்லறத்துணை உங்களுக்கு நல்ல ஆலோசனை வழங்குவார். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இயங்கும். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பை விரும்பி ஏற்றுக் கொள்வர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

முக்கியமான சில செயல்கள் நிறைவேற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். சமூகத்தில் பெற்ற மதிப்பு, மரியாதையை கண்ணும் கருத்துமாக பாதுகாப்பீர்கள்.வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் கண்காணித்து நல்வழி நடத்துவது அவசியம். வழக்கு விவகாரத்தில் சமரசத் தீர்வு கிடைக்க, சிலர் உதவுவர். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறை சிரமம் தவிர்க்க உதவும்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

விவகாரமாக பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. அதிக பயன் தராத பொருளை விலைக்கு வாங்க வேண்டாம். உடன்பிறந்தவர் உங்களின் கஷ்டம் தீர உதவுவார். வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். கடன். பிணி தொந்தரவு குறையும். இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். உற்பத்தி. விற்பனை சீராகும். குடும்ப பெண்கள், கணவர் வழி உறவினர் களிடம் நல்அன்பு பாராட்டி நற்பெயர் பெறுவீர்கள்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் வளரும். பழகுபவர்களிடம் எதிர்மறை கருத்து பேசுவதால் அவப்பெயர் வரலாம். கவனம் தேவை. புத்திரர் ஆர்வ மிகுதியால் செயல்களில் குளறுபடி எதிர்கொள்வர். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும். இல்லறத்துணை அறிவுத்திறனில் மேம்பட்டு நல்ல ஆலோசகராக விளங்குவார். பணியாளர். திறம்பட பணிபுரிந்து பாராட்டு. வெகுமதி பெறுவர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நியாய குணத்துடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி எதிர்பாராத அளவில் வெற்றி தரும். பேசும் வார்த்தையில் நிதானம் நிறைந்திருக்கும். ஆன்மிக அருள் பெற்றவர்களின் ஆசி கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புத்திரர் மனதில் புதிய சிந்தனை வளர்த்துக் கொள்வர். தொழில். வியாபாரம் செழித்து பணவரவு திருப்திகரமாகும். பெண்கள் கணவர் பற்றி பிறர் சொல்லும் கருத்தின் உண்மையை உணர்வது நல்லது.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உடன் பிறந்தவர்களின் மனக்குறையை மாற்றும் அளவில் ஆறுதலாக பேசுவீர்கள். வீடு. வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரரின் சந்தேகங்களை உரிய விளக்கத்துடன் சரி செய்வீர்கள். தொழிலில் உபரி பணவரவு கிடைத்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்பு திருப்திகர பணவரவு பெறுவர். மாணவர்கள். வெளியிடம் சுற்றுவது தவிர்ப்பதால். படிப்பில் கவனம் வளரும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உடன் பிறந்தவர்களின் உதவி. முழு அளவில் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால். பயணம் எளிதாகும். புத்திரர் மனதில் இருந்த கஷ்டம் விலகி. புத்துணர்வுடன் செயல்படுவர். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவார். இல்லறத்துணை உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில். வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்க. புதிய வியூகம் உருவாக்குவீர்கள். பணியாளர். தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வர்.

**மகரம்**

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

மனதில் மகிழ்ச்சி. தெய்வ நம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள். ஆர்வம் மிகுந்த வார்த்தை தவறுதலாக அமைந்து. பிறர் மனம் வருந்த நேரலாம். கவனம் தேவை. அறிமுகம் இல்லாதவருக்கு வீடு. வாகனத்தில் இடம் தரவேண்டாம். புத்திரரின் சிந்தனையில் நல்ல மாற்றம் உருவாகும். இல்லறத்துணையுடன் விருந்து. விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில். வியாபாரத்தில் சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

தாமதமாகிய பணி புதிய முயற்சியால் நிறைவேறும். ஆன்மிக கருத்துகளை மறுத்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. வீடு. வாகனத்தில் பராமரிப்பு மேற்கொள்வதால். பயன்பாட்டுவசதி சீராக கிடைக்கும். புத்திரரின் தேவை நிறைவேற தாமதம் ஆவதால் வருத்தம் அடைவர். இல்லறத்துணை தன்னால் இயன்ற உதவியை வழங்குவார். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். குடும்ப பெண்கள். செயல்களில் குளறுபடி எதிர்கொள்வர்.


**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி. ரேவதி**

மனதில் புத்துணர்வு. செயல்களில் சமயோசித குணம் நிறைந்திருக்கும். பயனற்ற விவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். சகோதரியின் கூடுதல் அன்பு. பாசம் கிடைக்கும். வீட்டில் மங்கலம் நிறைந்திருக்கச்ம். புத்திரர் அறிவாற்றலுடன் நடந்து கொள்வர். தொழில். வியாபாரம் வளர்ச்சி பெற. தேவையான அரசு உதவி பெறலாம். பணியாளர் ஆர்வமுடன் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள். படிப்பில் உருவான சந்தேகம் நீங்கி. கூடுதல் தேர்ச்சி விகிதம் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றொரு நாள் சித்தி என்னைப் பாடசாலையால் மறித்து விட்டு சந்தைக்குச் சென்று விட்டார். வேலைக்குச் சென்ற சித்தப்பா விடுமுறை என்று திரும்பி வந்தார். " ஓ... என்ன அபிம்மா சித்தி வெளியே போட்டாவா?" என்றவாறு என்னை நோக்கி வந்தார். ஓ... என்றுமில்லாத பாச மழையா? என்று நினைத்தவாறு "ஆம்" என்றேன். பதிலளித்து முடிக்கும் முன்பே அவரது அணைப்புக்கு ஆளானேன்.**



சிறுகதை

தட்சாயினி,
திருகோணமலை

# கூண்டுக்கு வெளியே...

மொட்டிலே கருகாகி வசந்தத்தை தொலைத்தவளாக ஆரபி மௌனமாய்க் காத்திருக்கின்றாள். யாருக்காக? தன் வாழ்விலே மாற்றம் தந்து, மன துக்கு உணர்வைத் தந்து, வாழ்விலே மொழியை மீட்டுத் தந்த வைத்தியர் வசந்தாவுக்காகத் தான்.

சலனமேதுமின்றி மெல்லென அறையினுள் நுழைந்தாள் வைத்தியர் வசந்தா. ஆரபி "வணக்கம் டொக்டர்" என எழுந்தாள். "வணக்கம் ஆரபி உட்காருங்கள். ஆரபி உங்களுக்கு துன்பக் கதவுகள் இறுக்கப் பூட்டப்பட்டு வசந்தத்தின் கதவுகள் திறக்கப்பட்டு விட்டது" என்றாள் உடனே.

"புரியவில்லையே வைத்தியர் " என்றவாறு கண் இமைக்காது வைத்தியரையே பார்த்தாள். "ஆரபி! நீங்கள் பழைய ஆரபி அல்ல. புதுப்பிறவி எடுத்துள்ளீர்கள். இந்த நிமிடங்கள் தான் உங்களுக்கு இந்த வைத்தியசாலை வாழ்வின் கடைசி நிமிடங்கள்" "அப்படியானால் என்னை வேறெங்காவது மாற்றப் போகிறீர்களா?" என தாயைப் பிரியும் சேயைப் போல ஏக்கத்துடன் கேட்டாள். "என்ன ஆரபி இன்னும் புரியவில்லையா? உமது நோயிலிருந்து பூரண குணமடைந்துள்ளீர்கள்" தனது கண்களைத் தொட்டவாறு நடப்பது அனைத்தும் உண்மையா என ஏங்கியது பதின்மூன்று வயதும் நிரம்பாத பிஞ்சு உள்ளம்.

தனது நிலையினை மறந்து ஓடிச் சென்று வைத்தியரையே இறுக அணைத்துக் கொண்டாள் ஆரபி. வசந்தா ஆரபியின் தலையைத்தடவியவாறு 'ஆரபி உங்களை அழைத்துச் செல்வதற்காக உங்களது சித்திக்கு அறிவித்தல் வழங்கியுள்ளோம்" எனக் கூறியதும் 'இடி விழுந்த இதயம் போல' சட்டெனத் தனது கையை அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டாள். வசந்தாவின் இதயம் ஒரு கணம் துடிக்க மறுத்தது. "ஏன் ஆரபி நானுனக்கு என்ன செய்தேன். உன்னுடைய உறவுகளுடன் நீசேர்வதுதப்பா?" எனக்கேட்டதும் "இல்ல டொக்டர் இல்ல என்னால அங்கு போக முடியாது. வேறெந்த அநாதை இல்லத்துக்கெண்டாலும் போகச் சொல்லுங்கோ போறன். சித்தியோட மட்டும் போகல்ல" "என்னாச்சு ஆரபி" என அருகில் வந்து இருக்கையில் அமர்ந்தாள். அருகிலுள்ள நாற்காலியை இழுத்து தனதருகே போட்டு ஆரபியை அமரவைத்தாள். "நான் ஒரு தாயாகக் கேட் கிறேன். ஒன்றையும் மறைக்காமச் சொல்லு அப்ப தான் உனது வாழ்வுக்கு முடிவு காணலாம்" என்றாள்.

எவருடைய வாழ்விலும் நடக்க முடியாத சம்பவம் பிஞ்சு உள்ளத்தின் நினைவில் பொறி தட்டியது. அந்த நிமிடமே ஓ! என அழ ஆரம்பித்தாள். பதறல், பயம், ஏக்கம், அதிர்ச்சி எல்லா புலன்களும் ஒன்று சேர வைத்தியர் ஆரபியைப் பார்த்தாள். " டொக்டர் நான் அம்மாக்களுக்கு ஒரே பிள்ளை. அம்மாவோடு இருக்கும் போது சந்தோசம் மட்டும் தான் தெரியும். கவலை என்ற சொல் இருந்ததா? என்று கூடத் தெரியாது. ஒரு நாள் பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கும் போது அயல் வீட்டு மாமா ஓடி வந்து ரீச்சரிடம் இரகசியமாக ஏதோ சொன்னார். ரீச்சரின் பார்வை என்னிடம் திரும்பியது. எனக்கு கிட்ட வந்து "ஆரபி உங்களது அம்மா வைத்தியசாலையிலாம். நீங்கள் உடனே செல்லுங்கள்" எனக் கூறினார். காலை எனக்கு உணவு ஊட்டிய அம்மாவிற்கு என்ன ஆச்சு எனச் சிந்தித்தவாறே அந்த மாமாவுடன் சென்றேன். நீண்ட பெருமூச்சொன்றை இழுத்து விட்டவாறு சற்று நேரம் ஸ்தம்பித்தவளாய் மீண்டும் தனது கதையைக் கூறத் தொடங்கினாள்.

மாமாவின் சைக்கிள் வைத்திய சாலையைத் தாண்டி எனது வீடு நோக்கிச் சென்று வீட்டுக் கேற்றை அடைந்தது. வீட்டிலே அழுகுரலும் ஓலங்களும் கேட்டன. ஓடிவந்து என்னை அணைத்த சித்தியின் கையின் இடைவெளியால் எனது கண்கள் வீட்டுக்குள் தேடியது. கண்கள் இமைக்க மறுத்தன. இரத்தம் ஓட மறுத்தது. கால்கள் நடக்க மறந்தன. என் மூச்சு நின்று விட்டது போன்ற உணர்வு. கட்டிலில் மீளாத்துயில் கொள்வது வேறு யாருமல்ல. பத்து மாதம் சுமந்து பெற்ற என் அன்னை. தோள்களிலே தூக்கிக் காவடி ஆட்டிய என் அப்பா. எந்தவித சலனமுமற்று ஏன் என்னைக் கூட மறந்து விட்டு அசையாமல் கிடந்தார்கள்.

"என்னாச்சு சித்தி என்னாச்சு" என்றேன். ஏதோ விபத்தாம் என்பது மட்டும் என் காதில் விழுந்தது. மிகுதியை கேட்பதற்கு சுய நினைவு இருந்தால் தானே. கண் விழித்த போது அம்மாவையும் அப்பாவையும் எங்கோ தூக்கிச் சென்றார்கள். ஓரிரு நாள்கள் எனது உறவுகளுடன் என் வீட்டில் கழிந்தன பொழுதுகள்.

அதிகாரப் புத்தகத்திலிருக்கும் சட்டத்தைப் போல எனது சித்தி வீட்டிற்கு அழைத்து தந்தை இல்லை என்ற துன்பம் என்னை ஆட்கொள்ளவேயில்லை. சூரியன் உதிப்பதும் மறைவதுமாக நாள்கள் நகர்ந்தன. துன்பக் கடலில் நான் மூழ்க ஆரம்பித்தேன். சித்தியின் அடக்குமுறையும் சித்தப்பாவின் கெடுபிடியும் என் மேல் வீசப்பட்டன.

அன்றொரு நாள் சித்தி என்னைப் பாடசாலையால் மறித்து விட்டு சந்தைக்குச் சென்று விட்டாள். வேலைக்குச்சென்ற சித்தப்பா விடுமுறை என்று திரும்பிவந்தார். 'ஓ...என்ன அபிம்மா சித்தி வெளியே போட்டாவா?" என்றவாறு என்னை நோக்கி வந்தார். ஓ...என்றுமில்லாத பாச மழையா? என்று நினைத்தவாறு "ஆம்" என்றேன். பதிலளித்து முடிக்கும் முன்பே அவரது அணைப்புக்கு ஆளானேன். பேச முடியவில்லை. அத்துடன் நினைவிழந்தேன். மீண்டும் அழ ஆரம்பித்தாள். "பின் என்ன ஆரபி நடந்தது முழுவதையும் சொல் முடிவு கிடைக்கும்" பிஞ்சு விரல்களால் கண்ணீரைத் தட்டி விட்டபடி கண் விழித்துப் பார்த்த போது நான் தனியே இருந்தேன். "என் நிலையை என்னாலே பார்க்க முடியவில்லை" எழுந்து என்னைச் சரிப்படுத்திய போது நெருஞ்சி முள் போல் என் நெஞ்சில் குத்தியது. ஏதோ ஒன்று என்னை உறுத்தியது. ஓரிரு நிமிடங்கள் கழித்து சித்தியும் வந்தார். ஏன் சித்தப்பாவும் வந்தார். எனக்கு நடந்தவற்றை சித்தியிடம் சொல்லலாம் என்று எண்ணியபோது 'வேண்டாம்' என்றது என் மனம். தாங்க முடியாத பெற்றோரின் இழப்பு.

வெளியே சொல்ல முடியாத துன்ப நிகழ்வுகள் அனைத்துமே என்னை மன நோய்க்குத் தயாராக்கிக் கொண்டிருந்தன. ஆம் வைத்தியர் உங்களைப் போல் ஒருவர் மனம் விட்டுப் பேசியிருந்திருந்தால் நான் ஒரு இலட்சிய வாதியாக மாறியிருப்பேன்.

வைத்தியசாலையில் என் தாயுருவில் உங்கள் தரிசனம் எனக்குக் கிடைத்தது. ஏன் எனக்கு மட்டும் இந்த நிலை வைத்தியர். உங்களைப் போல ஒரு வைத்தியராக வர வேணும் எனச் சின்னவயதிலே ஆசைப்பட்டது போல் நடக்காதா? வைத்தியசாலையும் சிகிச்சையும் சித்தி வீடுமா உலகம்? நான் வெளி உலகமே பார்க்க முடியாதா? கொடிய மனங்கள் மாற மாட்டாதா? வைத்தியர். என் மனதைத் துளைக்கும் ஆயிரம் கேள்விகளை அழுகையுடன் கேட்டாள்.

ஆரபியை அணைத்துக் கொண்டாள். "ஆரபி நான் பெரிய அதிஷ்டசாலி தான். ஏனென்டா? உன்னை என்னிடத்தில் தந்துள்ளான் இறைவன். நீ இனித் தனிமைப்பட்ட ஆரபி இல்லை. உன் எதிர்காலக் கனவையும் இலட்சியங்களையும் நிறைவேற்றுவதற்காகப் புதுப்பிறவி எடுத்த வசந்தாவின் மகள்" இனி ஆரபியின் உலகம் இருட்டு அல்ல. எப்பொழுதும் வெளிச்சம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரம்புட்டான் காய்ச்சல் உண்மையா?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

"வாயைக் கட்டிக் கிடக்கிறாளே. ரம்புட்டான் ரம்புட்டானாகத் திண்டு தீத்தாள். இப்ப காய்ச்சல் எண்டு அனுங்கிக் கொண்டிருக்கிறாள்" திட்டித் தீர்த்தார் தந்தை. வேலைக்குப் போகாமல் பிள்ளையை மருத்துவ மனைக்குக் கூட்டித் திரிய வேண்டிக் கிடக்கிறதே என்ற சினமாக இருக்கலாம்.

இவர் மட்டுமல்ல, இன்னமும் பலர் தங்கள் பிள்ளைகள் ரம்புட்டான் பழம் சாப்பிட்டதால்தான் காய்ச்சல் வந்தது என அவர்களில் குற்றம் கண்டார்கள்.

மே, ஜூன், ஜூலை மாதங்கள் பொதுவாக ரம்புட்டான சீசனாக இருக்கும். மல்வான ரம்புட்டான் மிகவும் பிரசித்தமானது. களனிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலேயே பெருமளவு ரம்புட்டான் உற்பத்தியாகின்றது.

இருந்தாலும் பிபில, மொனராஹல பகுதிகளிலிருந்து தை ,மாசி மாசங்களில் குறைந்தளவு ரம்புட்டான் பழங்கள் வருவதுண்டு.

## ரம்புட்டானுக்கு காய்ச்சலா?

சீசன் காலத்தில் ரோட் ஓரமெல்லாம் தற்காலிக கடைகள், லொறிகள். இவற்றில் எல்லாம் மதாளித்த சிவப்பு கம்பளிப் பூச்சிகள் போலப் பழங்கள் குவிந்து கிடக்கும். வழமையான பழக்கடைகளிலும் கூடை நிறைய வைத்திருப்பார்கள். பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்களும் ரம்புட்டான் அமுக்குவதில் பின்நிற்பதில்லை. இவ்வாறு ரம்புட்டான் சாப்பிட்டவர்களில் சிலர் காய்ச்சலுடன் வருகிறார்கள்.

அதற்கு ரம்புட்டான் காய்ச்சல் என்று தாங்களாகவே நாமமும் சூட்டிவிடுகிறார்கள்.

அதே வேளை ரம்புட்டான் சாப்பிடாத பலரும் இந்தப் பருவ காலத்தில் காய்ச்சலுடன் வருகிறார்கள்.

காய்ச்சல் என்பது தனி ஒரு நோயல்ல என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். தடிமன் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், டைபொயிட் காய்ச்சல் எனப் பலவகை இருக்கின்றன. இவை யாவும் கிருமிகள் தொற்றுவதாலேயே ஏற்படுகின்றன.

"ரம்புட்டான் சாப்பிடுவதால் எவ்வித காய்ச்சலும் வருவதில்லை. ஆனால் இது பரவலாகக் கிடைக்கும் காலங்களான ஜூன், ஜூலை மாதங்களில் பெரும்பாலும் தென்னிலங்கையில் மழை பெய்வதுண்டு. வெயிலுடன் மழையும் மாறி மாறி வரும் இந்த மாதங்களில் டெங்கு முதல் சாதாரண காய்ச்சல்கள் எனப் பல்வேறு தொற்று நோய்கள் பரவுகின்றன

நுளம்பு கடிப்பதால் டெங்குக் காய்ச்சல், மலேரியா போன்றவை வருகின்றன. எலிகளின் எச்சங்களால் எலிக்காய்ச்சல் பரவுகிறது. நோயுள்ளவர் தும்முவதாலும் இருமுவதாலும் தொற்றுகிறது பன்றிக் காய்ச்சல். ஆனால் ரம்புட்டான் பழம் சாப்பிடுவதால் எந்தக் காய்ச்சலும் பரவுவதில்லை

## எப்படி உண்பது?

நெல்லிக்காய், மங்குஸ்தான், மாம்பழம், கொய்யாப்பழம் போன்ற எந்தப் பழத்தை வாங்கினாலும் அவற்றை உண்ண முன்னர் நன்கு கழுவிய பின்னரே உண்ண வேண்டும் என்பது தெரிந்ததே. பழத்தின் உட்புறம் கிருமிகள் தீண்டாது சுத்தமாக இருக்கும். எனினும் அவற்றின் தோலானது பலவித அழுக்குகளாலும் கிருமிகளாலும் மாசடைந்திருக்கக் கூடும்.

ஏனெனில் பழங்களைப் பிடுங்கி நிலத்தில் போட்டிருப்பார்கள். நிலத்தில் நாய் பூனை போன்ற பிராணிகளின் மலம், குருவிகளின் எச்சம், மனிதர்களின் கழிவுகள் போன்ற பலவற்றிலிருந்த கிருமிகள் பழத்தின் தோலை மாசுபடுத்தியிருக்கும். பழங்களை பறித்த இடங்களிலிருந்து விற்பனை செய்யும் இடத்துக்கு கொண்டுவரப் பயன்படுத்தும் பைகள் சாக்கு போன்றவற்றில் இருந்தும் கிருமிகள் பரவியிருக்கும்.



அதேபோல தெருவோரம் வைத்து விற்கும்போதும் காற்றிலிருந்தும் பழங்களைக் கையாளும் மனிதர்களின் கரங்களிலிருந்தும் பலவிதமான கிருமிகள் அவற்றின் தோலில் படிந்திருக்க வாய்ப்புண்டு.

எனவேதான் ரம்புட்டான் முதல் வேறு எந்தப் பழத்தை வாங்கினாலும் சாப்பிட முன்னர் நன்கு கழுவவேண்டும். இரண்டு தடவைகளாவது கழுவ வேண்டும். அல்லது ஓடும் நீரில் கழுவ வேண்டும்.

கழுவிய பின்னரும் கூட ரம்புட்டான் தோலை வாயினால் கடிக்க வேண்டாம்.

கத்தியினால் தோலை வெட்டி அகற்றிய பின்னர் மீண்டும் கைகளை நீரினால் கழுவி அதன் பின்னரே பழத்தை எடுத்து உண்ணுங்கள். சுத்தப்படுத்திய பழங்களைச் சாப்பிடுவதால் நோய்கள் எதுவும் தொற்றாது. உள்ளிருக்கும் சுளைகள் சுத்தமானவை.

மாறாக சுத்தப்படுத்தாமல் உண்டால் வயிற்றோட்டம், வாந்தி, டைபொயிட், செங்கண்மாரி, குடற் பூச்சிகள் போன்ற பல்வேறு நோய்களுக்கும் ஆளாகக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை

## ரம்புட்டான் பழம் பற்றி......

ரம்புட்டான் இலங்கையில் பிரபல்யமாக இருந்தாலும் இதன் பூர்வீகம் இந்தோனிசியா என அறியப்படுகிறது.

இது அதிக நீர்ச் சத்துக் கொண்ட பழமாகும். ஆயினும் பழத்தின் சாப்பிடக் கூடிய பகுதியின் 100 கிராமிலிருந்து 64 கிலோ கலோரியளவு சக்தி கிடைக்கும். அதேவேளை புரதம் 1 கிராம் உள்ளது. கொழுப்பு மிகக் குறைவாக 0.1 கிராம் மட்டுமே உள்ளது. கல்சியம், பொஸ்பரஸ் போன்ற கனிமங்களும், ரைபோபிளேவின், தயமின், விற்றமின் சீ போன்றவையும் நிறையக் கிடைக்கின்றன.

இதன் காரணமாக இந்தோனிசியா. மலேயா போன்ற நாடுகளில் நீரிழிவு, பிரஸர் போன்ற நோய்களுக்கான வீட்டு மருத்துவமாக இது உபயோகிக்கப் படுகிறது. காய்ச்சலுக்கு மருந்தாக ரம்புட்டான் பட்டைகளை உபயோகிப்பதாகவும் தெரிகிறது.

ரம்புட்டானால் காய்ச்சல் வருகிறது என நம்மவர்கள் சொல்ல காய்ச்சலுக்கு மருந்தாக அதே ரம்புட்டானை வேறு நாடுகளில் பயன்படுத்துவது சுவாரஷ்யமான தகவலாகப்படுகிறது. இருந்தபோதும் ரம்புட்டானால் காய்ச்சல் வருகிறது என்பது தவறான கருத்து என்றே சொல்ல வேண்டும்.

# பழங்கள் பற்றிய தவறான எண்ணங்கள்

"முழுகிப் போட்டு மாம்பழம் சாப்பிட்டன். தொண்டை கட்டி சளியோடை காய்ச்சல் வந்துவிட்டது" எனத் தன்னைத்தானே நொந்து கொண்டாள் அரச நிறுவனம் ஒன்றில் அதிகாரியாகப் பணியாற்றும் ஒரு பெண்மணி.

பழங்கள் பற்றி எமது சமூகத்தினரிடையே பல தவறான எண்ணங்கள் இருக்கவே செய்கின்றன. அவை பற்றிய விழிப்புணர்வு தேவை.

நானும்தான் முழு மாம்பழம் சாப்பிட்டனான். எனக்கு ஒண்டும் இல்லைதானே என்றார்; கணவன். மற்றவர் முன்னாலாவது தனது வீரத்தைக் காட்டிய பெருமை முகத்தில் படர்ந்தது.

"இந்தச் சளித் தொல்லையோடை நாளாந்தம் அல்லாடுறன். வாழைப்பழத்தை தொடுறதே இல்லை" என்றார் இன்னொரு பெரியவர்.

"தயங்காமல் வாழைப்பழம் தினமும் சாப்பிடுங்கோ. இவ்வளவு நாளும் வாழைப்பழத்தை கைவிட்டும் சளித்தொல்லை தீரவில்லை என்றால், உங்கடை சளிக்கு வாழைப்பழம் காரணம் இல்லை என்றுதானே அர்த்தம்" என்றேன் நான்.

சிறிது காலத்துக்கு முன்னர் Imperial College of London இல் செய்யப்பட்ட ஒரு ஆய்வானது தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிடும் குழந்தைகளுக்கு ஆஸ்த்மா நோய் வருவதற்கான சாத்தியம் 34% குறைவு என்கிறது. எனவே சளித்தொல்லைக்குக் காரணம் வாழைப்பழம் அல்ல என்பது தெளிவாகிறது.

அதேபோல பிரஷர் வராமல் தடுப்பதற்கும் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் வாழைப்பழத்தில் உள்ள கனிமமான பொட்டாசியம் உதவும். இதற்கு எதிர்மாறாக கறிஉப்பில் உள்ள சோடியம் சத்து பிரஷரை உயர்த்தும் என்பது பரவலாகத் தெரிந்த விடயமே. அத்துடன் குருதியில் பொட்டாசியம் அதிகளவில் இருப்பதானது பல்வேறு நோய்களால் ஒருவர் மரணிக்கக் கூடிய சாத்தியத்தை 20% ஆல் குறைக்கிறது என்கிறது மற்றொரு ஆய்வு.

வாழைப்பழம் பற்றிய தவறான கருத்துகளை உதறி ஒதுக்க வேண்டும். அது மிகச் சிறந்த பழங்களில் ஒன்று என்பதால்தான் உலகில் ஆகக் குறைந்தது 107 நாடுகளில் பயிரிடப்படுகிறது. பலராலும் விரும்பி உண்ணப்படுகிறது.

மாம்பழத்தில் 20ற்கும் மேற்பட்ட விட்டமின்களும் தாதுப் பொருட்களும் உண்டு. அதிலுள்ள zeaxanthin என்ற ஒட்சிசனெதிரி ஆனது கண்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நீல ஒளிக் கதிர்களை வடித்தெடுப்பதன் மூலம் மக்கியுலர் டிஜெனரேசன் (Macular degeneration) என்ற கண்பார்வை இழப்பு நோயைத் தடுக்கும் எனக் கூறுகிறார்கள்.

அத்துடன் மாம்பழத்தில் உள்ள பீற்றா கரோடின் என்ற பொருளானது சளி ஆஸ்த்மா போன்றவற்றை தடுக்கும் ஆற்றல் கொண்டது. பப்பாளி, பூசணி, புரொகோலி, கரட் போன்றவற்றிலும் இது நிறைய உண்டு. அத்துடன் புரஸ்ரேட் புற்று நோய், பெருங் குடல் புற்று நோய் போன்றவற்றையும் தடுக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு வகைப் பழங்களிலும் பல போஷணைப் பொருட்கள் உண்டு. அவை பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல்கள் கொண்டவை. ஆயினும் அவற்றை விபரிக்க கட்டுரையின் நீளம் இடம் தராது.

ஒவ்வொரு வேளை உணவுடனும் ஏதாவது ஒரு பழத்தையாவது உண்ணுங்கள். நோயற்ற வாழ்வு வாழ அது கை கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்ஸியும்

**"சுமந்திரனை நம்பாதே" அத்தியாயம் - 12**

## அறிவியல் தொடர் கதை

*(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)*

**கொ**ம்பியூட்டர் தந்த துண்டுச்சீட்டு இன்னமும் கைக்குள் சுருட்டியபடி இருந்தது. இவனை நம்பலாமா? கந்தசாமி கடந்த சிலநாள்களாக நடந்தவற்றைக் கடகடவென ஒருமுறை மீட்டுப்பார்த்தார். சிவனே என்று இருந்தவனின் வீட்டை இடிக்க ஆமி வந்ததும், ஆமியை சுமந்திரன் இடையில் வந்து குழப்பியதும், விடிய வெள்ளன தவறணைக்குப் போய் கள்ளுக் குடித்ததும் .. இருந்தாற்போல உலகம் அழியப்போவதாக சுமந்திரன் குண்டைத் தூக்கிப் போட்டதும், சில நிமிடங்களில் அதுவே நடந்ததும், அப்புறம் மிகிந்தர்களிடம் சிக்கி தப்பி, கரும்பொருளுக்குள் நுழைந்ததும் அடடா சுமந்திரன் மட்டும் நம்மோடு இல்லாமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? தானும் செல்வராணியுடன் கூடவே போய் சேர்ந்திருக்கவேண்டியது தான். அவளிடம் இருந்து தன்னை காப்பாற்றிய சுமந்திரனை சந்தேகப்பட கந்தசாமியால் முடியவில்லை. அப்படி என்றால் கொம்பியூட்டர் ஏன் எனக்கு பொய் சொல்லவேண்டும்?

"கந்தசாமி .. சொல்லுறது விளங்கேல்லையா ..என்ன பேயறைஞ்சவன் போல நிக்கிறாய்?" சுமந்திரன் திரும்பவும் சத்தமாக கேட்டபோது தான் கந்தசாமி சுயநினைவுக்கு வந்தார்.

"இல்ல சுமந்திரன் ரெண்டு மூண்டு நாளா நடக்கிறத நினைச்சா மண்டை கிறுகிறுக்குது நீயும் ஒரு பிடி குடுத்துப் பேச மாட்டன் எண்டுறாய்"

இவனிடம் சொல்லலாமா வேண்டாமா? சொல்லுவதால் ஒரு பிரயோசனமுமில்லை. இந்த இடத்தில் இவனை விட்டால் வேறு உதவியும் இல்லை. விட்டுப்பிடிப்போம் என்பது கந்தசாமியின் எண்ணம்.

"இல்லை கந்தசாமி ... உன்ர முகத்தில ஏதோ ஒரு குழப்பம் இருக்கு"

"வேற என்ன இருக்கும் எண்டு நினைக்கிறாய்? கனவுல கூட நினைச்சு பார்க்காத விஷயங்கள் எல்லாம் நடந்துகொண்டு இருக்கு. இப்ப எங்க இருக்கிறம்? நீ வேற ஏதாவது கேட்டா விழல் கதை கதைச்சு குழப்பிற .. இந்த கொம் .. ப்ச் இது என்ன மாதிரி இடம் யாரை .. எதை நம்பிறது எண்டு கூடத் தெரியேலை"

"கொம்" என்று சொல்ல வந்துவிட்டு முடிக்காமால் விழுங்கிக்கொண்ட கந்தசாமியின் குரலில் தெரிந்த ஒருவித பதற்றத்தை சுமந்திரன் கவனிக்க தவறவில்லை. மெல்ல கொடுக்குக்குள் சிரித்தார்.

"அந்த கொம்பியூட்டரோட கதை குடுத்தியா?"

"அப்பிடியொண்டுமில்ல .. சும்மா ஒரு தேத்தண்ணி கேட்டனான்"

"தேத்தண்ணியா .. அதிட்டையா? குடிச்சனியா?"

"இல்ல .. அதுக்குள்ள தான் நீ வந்திட்டயே"

"அப்பாடி .. தப்பிட்டாய்..நல்ல காலம் .. கதை கந்தலாகியிருக்கும்"

"என்ன சொல்லுறாய் சுமந்திரன்?"

"சொல்லுறன் .. கொஞ்சம் கொஞ்சமா எல்லாத்தையும் முதலில சாப்பிடலாம்"

"இல்லை. இப்ப சொல்லு .. இது என்ன இடம் .. நாங்கள் எங்க இருக்கிறம்? எல்லாத்தையும் சொல்லு "

"சரி .. சொன்னாலும் உனக்கு விளங்க போறதில்லை .. நாங்க இருக்கிற இடம் தான் டார்க் மேட்டர் .. கரும் பொருள் .. நீங்கள் எல்லோருமே பிரபஞ்சத்தின் இயக்கம் என்று நினைக்கிற விஷயத்தை உங்களுக்கே தெரியாமல் ஓரளவுக்கு கட்டுப்படுத்தி இயக்குற விஷயம் "

"நீங்கள் எண்டால்?"

"நீங்கள் எண்டால் .. எல்லாமே .. அதாவது ..கிரகங்கள் .உடுத்தொகுதிகள் பால்வீதி .. இன்னொரு . கலக்ஸி .. இன்னொரு கலக்ஸி .. எல்லா பொருட்களும் ..பேசிக்கலி பெருவெடிப்பில் உருவான எல்லா பொருட்களுமே!"

"அப்ப பூமில நடக்கிற .."

"..நடந்த" "அட கருமமே .. அப்ப பூமில நடந்த சம்பவங்கள் .. ஆள்கள் .. கல் தோன்றி மண் தோன்றா காலத்து மூத்த தமிழ் .. எல்லாமே இந்த கறுப்பு பொருளில இருந்து தான் உருவானதா?"

"அப்பிடியும் சொல்லலாம் .. சொல்லப்போனா ... பூமி எண்டுறது ஒரு வெறும் கொம்பியூட்டர் இலூஷன் ..பரிசோதனை முயற்சி .. பிரபஞ்சத்தின் ஆதாரமான கேள்வியை "

"என்ன சொன்னாய்? ..பூமி ஒரு . கொம்பியூட்டரா? என்ன அலம்புறாய்?"

'ஓம் .. பூமி உண்மையிலேயே ஒரு கொம்பியூட்டர் தான்.' "தலை சுத்துது .. வடிவாச் சொல்லு கொஞ்சம்"

" .. அது ஒரு பெரிய கதை .. முதலில வெளிய போய் சாப்பிடலாம் வா.."

"இல்ல நான் என்ன சொல்ல வாறன் எண்டா "

ஏதோ சொல்லவந்த கந்தசாமியை மறித்து, சுமந்திரன் வேக வேகமாக உடுப்பு மாற்றி தயாரானார். கந்தசாமிக்கும் பசி வயிற்றை கிள்ள ஆரம்பித்திருந்தது. இருவரும் கதவை திறந்துகொண்டு வெளியே வந்தார்கள். வெளியுலகம் கொஞ்சம் பூமியை போலவே இருந்தது. தூரத்தில் தென்னை மரங்கள் எல்லாம் சோலையாக அப்படியே காற்றில் மிதந்து போய்க்கொண்டு இருந்தன. மேற்கில் சூரியன் மறைந்துகொண்டிருந்த சமயம். அட இங்கேயும் சூரியனா என்ற ஆச்சரியத்தில் கந்தசாமி கிழக்கே பார்த்தால் அங்கே இன்னொரு சூரியன் உதித்துக்கொண்டிருக்க, திரும்பி மேற்கே பார்த்தால் சூரியன் மறைந்துகொண்டிருக்க .. இரட்டைச் சூரியன் .. கரும்பொருளில் இருட்டே இல்லையா? எவண்டா இந்தப் பெயர் வச்சவன்?

இம்முறை கந்தசாமி விளக்கம் எதுவும் சுமந்திரனிடம் கேட்கவில்லை. எல்லாக்கேள்விகளுக்கும் தடாலென்று ஒரு பதில் வைத்திருப்பான் அவன். அரைவாசி பதில்கள் அளக்கிறான் போலவும் தெரியுது. வீணாகக் கேள்விகள் எதுவும் இனி கேட்க வேண்டாம் என்று நினைத்துக் கொண்டார். வடக்கு திசையில், அது தெற்காக கூட இருக்கலாம், அங்கே கடல் போல ஒன்று நிலையாக இருந்தது. இவர்கள் இருந்த தரை அலை போல போய் கடலை அடித்து அடித்து திரும்பி வந்தது. கந்தசாமிக்கு இப்போது ஆச்சரியத்துக்கு பதிலாக விசனம் தான் வந்தது. கடல் அப்படியே இருக்க, நிலம் கடலில் போய் முட்டி மோதி திரும்பி வருகிறது. ஆனால் இருப்பவர்களுக்கு அந்த அலையின் அசைவை உணர முடியவில்லை. தரை வேறு கொஞ்சம் கொஞ்சமாக கடல் தண்ணியை அரித்துக்கொண்டு இருந்தது போல தெரிந்தது. சிறுவர்கள் சிலர் கடலில் நிலைத்து நிற்க பழகிக்கொண்டு இருந்தனர். ஆம் ..சிறுவர்கள் அப்படியே பூமி மனிதர்கள் போலவே. உடுப்பு பொட்டு தொப்பி அணிந்து, சாண்டில்ஸ் போட்டு. "எது கடல்? எது தரை? எதுவோ எது? அதுவே அது" என்று எவனோ ஒருத்தன் எழுதிய கவிதை போன வார[illegible] உதயன் நாலாம் பக்கத்தில் எழுதியிருந்ததும் ஞாபகம் வந்தது.

"சிவனே எண்டு கடைசில ஓரளவுக்கு உருப்படியான இடத்துக்கு வந்து சேர்ந்திட்டம் ..அருமந்தாப்போல மனி[illegible] காண கூடியதா இருக்கு .. இடமும் பூ[illegible] மாதிரி" சுமந்திரன் திரும்பவும் சிரித்தா[illegible]

"இல்ல கந்தசாமி .. எல்லாமே ஒரு இலூஷன் .. நீ எதை எப்படி பார்க்கிறா[illegible] எண்டதை உன்னுடைய மனம் தான் தீர்மானிக்குது .. சொல்லப்போனா .. [illegible] தான் இந்த இடம் மாதிரி பூமியை டிசைன் பண்ணின ஆர்கிடெக்ட்ஸின் கற்பனை வறட்சி .. புதுசா ஒன்றையு[illegible] கண்டுபிடிக்கமுடியாம இதையே உல[illegible] பண்ணி செய்திட்டாங்கள் .. "

(கலக்குவார் கந்தசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேஸ்புக் பதற்றம்

■ சுடுதண்ணி

நீங்கள் அதிகம் பதற்றமடைகிறீர்களா?- உங்கள் பேஸ்புக் புகைப்படப் பகிர்வுகளை சற்று கண்காணியுங்கள்

ஒருவர் அதிக பதற்றத்துடன் காணப்படுவதற்கும், அவரின் பேஸ்புக் புகைப்பட பகிர்வுகளுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும். இது குறித்து லண்டனில் ஒரு ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.




அந்த ஆய்வறிக்கையில்: ஒருவர் அதிகமான பதற்றத்துடன் காணப்படுவதற்கும், பேஸ்புக்கில் புகைப்படங்களை மிக அதிக அளவில் பதிவேற்றம் செய்வதற்கும் நேரடியாகத் தொடர்பு இருக்கிறது. பிறரால் கண்டுக் கொள்ளப் பட வேண்டும், அதிகமான 'லைக்ஸ்' வேண்டும் என்று எண்ணுபவர்களே இப்படி அதிக அளவில் புகைப்படங்களை பேஸ்புக்கில் பதிவேற்றுகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில், அவர்கள் பிறரிடம் சகஜமாகப் பழகுபவராக இருப்பதில்லை என்றும் சமூக வலைத்தளங்களில் தங்கள் எண்ணங்களை எடுத்துரைப்பதில் தேர்ந்தவராகவும் இருப்பதில்லை என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகஜமாகப் பழகுபவர்கள் எதிர் பதற்றமானவர்கள்:


பிறரிடம் சகஜமாக பழகுபவர்கள் பேஸ்புக்கில் அவ்வப்போது தங்கள் புரொபைல் பிக்சரை மட்டுமே மாற்றுகின்றனர். ஆனால், பதற்றம் நிறைந்தவர்கள் அதிகமான புகைப்படங்களை ஒரே அல்பம் உள்ளே அடிக்கடி பதிவேற்றம் செய்கின்றனர்.

இதற்கு காரணம், அவர்கள் எப்போதும் தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார் கள் என்பதை தெரிந்து கொள்வதில் ஆர்வத்துடன் இருக்கின்றனர் என இந்த ஆய்வை மேற்கொண்ட பிரிட்டன் வோல்வெர்ஹாம்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் அஸார் எஃப்தெகார் கூறியுள்ளார்.

இந்த ஆய்வுக்காக ஆய்வாளர்களால் 17 வயது முதல் 55 வயது வரை கொண்ட 100 பேரிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டது. அவர்களின் தோற்றத்தைப் பற்றியும் அவரது சுய கருத்து உள்ளிட்ட இன்னும் சில கேள்விகளும் கேட்கப்பட்டன. அதன் பின்னர், இவர்கள் எப்படி புகைப்படங்களை பதிவேற்றம் செய்கிறார்கள், பேஸ்புக் நண்பர்களிடம் எப்படி உரையாடுகிறார்கள் என ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் முடிவில் தெரிந்தது என்னவென்றால், இவர்கள் தங்களது சமூகத்திடையே அதிகமான அங்கீகாரத்தையும், மக்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுக்குமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காகமே நீ ஏன் கறுப்பு?



"காகமே, காகமே நீ ஏன் கறுப்பாக இருக்கிறாய்?" என்று கேட்டான் கறுப்பன்.

"ஒரு காலத்தில் நான்தான் உலகிலேயே அழகான பறவையாக இருந்தேன் என்று சொன்னால் நீ நம்புவாயா?" என்று கேட்டது காகம்.

"எப்படி நம்ப முடியும்? "என்று ஆச்சரியப்பட்டான் கறுப்பன்.

"நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால் அதுதான் உண்மை. வண்ண வண்ணச் சிறகுகள், அழகான தோகை, இனிய குரலுடன் அவ்வளவு வசீகரமாக இருந்தேன் நான்"

"பின் எப்படி நீ இப்படியானாய்?"

"என் இரக்க குணத்தால்"

"அந்தக் கதையைக் கொஞ்சம் சொல்லு"

"என் அழகான தோற்றத்தைக் கண்டு பொறாமை கொண்ட மற்றப் பறவைகள் என் இரக்க குணத்தைப் பயன்படுத்தி பலன் அடைய நினைத்தன.

'உன் பச்சை நிறத்தை எனக்குக் கொடேன்' என்று கேட்டு வாங்கிக் கொண்டது பச்சைக்கிளி.

'எனக்கு நீல நிறம்' என்று வாங்கிக் கொண்டது மீன்கொத்தி.

'வெண்மை ' எனக்கு என்று எடுத்துக் கொண்டது புறா. இப்படியாக ஒவ்வொரு நிறமும் போக என்னிடம் மிஞ்சியிருந்தது என் கம்பீரமான கொண்டையும் அழகான தோகையும்தான். பின் சேவல் கொண்டையையும் மயில் தோகையையும் வாங்கிக் கொண்டன.

அவை போன பிறகு என்னிடம் மெல்ல வந்தது குயில்.

'காகமே, காகமே நீயும் கறுப்பு. நானும் கறுப்பு. எனவே எனக்கு உன் நிறமெல்லாம் வேண்டாம். உன் குரலை மட்டும் கொடு போதும்' என்றது.

அதையும் நான் மகிழ்ச்சியோடு தந்து விட்டேன்" என்று சொல்லி முடித்தது காகம்.

இதைக் கேட்ட கறுப்பன், "என்ன காகமே, இவ்வளவு இளித்தவாயாக இருந்திருக்கிறாயே" என்று செல்லமாகக் கடிந்து கொண்டான்.

அதற்கு காகம் "நானே கொடுத்தாலும் யாரும் வாங்கிக் கொள்ளாத ஓர் உயர்ந்த குணம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. எனக்கு அதுவே போதும்" என்றது.

"அது என்ன குணம்?" என்று கேட்டான் கறுப்பன்.

"ஒற்றுமை"

கறுப்பன் யோசித்தான்.

காகம் சொன்னது உண்மைதானே?

காகத்தின் ஒற்றுமைக் குணம் பற்றி நமக்கே தெரியும்.

அதனால்தான் எல்லாப் பறவைகளையும் கூண்டில் அடைத்து வைத்து வளர்க்கும் நாம் காகங்களை மட்டும் சுதந்திரமாக விட்டு வைத்திருக்கிறோம்...

அது மட்டுமா?

"கா... கா... "என உரிமையோடு நாம் சாப்பிட அழைக்கும் ஒரே பறவையும் அதுதானே?

கறுப்பனுக்கு ஒன்று தெளிவாக புரிந்தது...

மனசுக்கு ஏது நிறம் ?



ஒளிப்படம் தர்சன்

## உணர்வின் ஊற்று

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள் மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 27.08.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி :

**உணர்வின் ஊற்று - 10**

**சுடர் ஒளி**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கருக்கப்பட்ட தளிர்கள்



- அனுஷ்கன்

முல்லைத்தீவு செஞ்சோலை வளாகம் இருளிலிருந்து விடியலுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. நேரம் அதிகாலை 6.30. கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களை இணைத்து தலைமைத்துவ பயிற்சி நெறியொன்றுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இதன் போது இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு தேடும் நடவடிக்கைகள், பால் சமத்துவம், குழுவேலை, நேர முகாமைத்துவம், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகள், தலைமைத்துவத்துக்கான மேம்பாடு, ஆளுமை விருத்தி, இணைப்பாட விதான செயற்பாடுகள் போன்றவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட இருந்த்ன. கிளிநொச்சி கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி நெறியில் பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிலையத்தின் நிதியுதவியின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் கல்வி வலயத்தைச் சேர்ந்த 18 பாடசாலைகளை உள்ளடக்கிய சுமார் க.பொ.உயர்தரத்தைச் சேர்ந்த 500 மாணவர்களும், மாணவிகளும் உள்வாங்கப்பட்டிருந்தனர். அன்றையதினம் தீ மற்றும் மின் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்,குழு வேலை போன்ற பயிற்சிகளை வழங்க துறைசார் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

நேரம் சரியாக 7 மணியைத் தொட்டது. கிளிநொச்சி வான்பரப்பு ஊடாக திடீரென புகுந்து கொண்டன இலங்கை வான்படையின் நான்கு போர் விமானங்கள். ந்ான்கு கிபிர்களும் கொஞ்ச நேரம் வானில் பேரிரைச்சலோடு வட்டமிட, அச்சத்தோடு மாணவர்கள் பாதுகாப்புத் தேட முயன்றனர். அந்த அப்பாவி மாணவர்களின் பாதுகாப்பு தேடுதல்களை இரும்பு வல்லூறுகள் அனுமதிக்கவேயில்லை. அடுத்தடுத்து 16 குண்டுகளை செஞ்சோலை வளாகமெங்கும் வீசித் தள்ளிவிட்டு மறைந்து போயின.

கந்தகப் புகையும், புழுதியும் ஒன்றாகக் கலந்து வானை நோக்கி ஆவேசமாக எழ, அதையும் மீறி மழலைகளின் உயிர்க் கதறல் காற்றில் கலந்தது. பாதுகாப்பு தேட முயன்ற மாணவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உடல் சிதறி உருக்குலைந்து போய் கிடந்தனர். குறிப்பாக மரங்களுக்குக் கீழ் பாதுகாப்பு தேட முயன்றவர்களும் பங்கர்களை தேடி ஓடியவர்கள் பலரும் உடல் சிதறிக் கிடந்தனர். எங்கும் தசைகளும் மனித உருவங்களின் பாகங்களுமே சிதறிக் கிடந்தன. கட்டட இடிபாடுகள் எங்கும் மாணவர்களின் சடலங்களையே மீட்புப் பணியாளர்களால் மீட்க முடிந்தது. அவயவங்கள் துண்டாடப்பட்ட நிலையில் குற்றுயிரோடு துடித்தபடி இருந்த மாணவிகளின் அலறல் மீட்புப் பணியாளர்களின் கண்களையே கலங்க வைத்தன.

செஞ்சோலை வளாகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு மாணவர்கள் பலியெடுக்கப்பட்ட செய்தி காட்டுத்தீ போல வன்னிப் பகுதியெங்கும் பரவத் தொடங்கியது. தமது பிள்ளைகளை தேடிய படி ஓடிவந்த பல பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் உயிரற்ற உடல்களையே ஒப்படைக்க காலம் கட்டளையிட்டிருந்தது. அன்றைய தேடுதலில் சுமார் 61 மாணவிகளின் உடல் சிதறிப் போன சடலங்களை மீட்புப் பணியாளர்களால் மீட்க முடிந்தது. குற்றுயிராய் துடித்துக் கொண்டிருந்தவர்களின் உடல்களை சுமந்தபடி வாகனங்கள் வைத்தியசாலைகள் நோக்கி விரைந்து கொண்டிருந்தன. உழவு இயந்திரங்கள், அம்புலன்ஸ் வாகனங்கள் போன்றவற்றில் ஏற்றப்பட்ட பிஞ்சுகளில் பலர் வழிகளிலேயே உயிரிழக்கவும் நேர்ந்தது.

அப்பாவித் தமிழ்க் குழந்தைகளைப் பலியெடுத்த வெற்றிக் களிப்பில் தளம் திரும்பிருந்தன அரச போர் விமானங்கள். வன்னியில் பிஞ்சுகளைப் பறி கொடுத்த சோகத்தில் பெற்றோர் கதற மறுபக்கத்தில் தனது வெற்றியை ஊடகங்கள் மூலம் பறைசாற்றிக் கொண்டிருந்தது அதிகாரம். அன்று மாலை தன்னுடைய ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீது அரச போர் விமானங்கள் வெற்றிகரத் தாக்குதலை நடத்தியதில் தளம் முற்றாக நிர்மூலம் என அரச படைகள் அறிவித்துக் கொண்டன.

அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஹெகலிய ரம்புக்வெல "அரசுக்கு எதிராக போராடும் யாரென்றாலும் வயது பால் வேறுபாடின்றி கொல்வோம்" என்று குழந்தைகளை கொன்று விட்டு அகிலத்தையே வென்றதைப் போன்ற திமிரோடு கொக்கரித்தான்.

இந்தச் துயரச் சம்பவம் அரங்கேறி எட்டு ஆண்டுகளை தொடுகிறது. சுமார் 65 மாணவிகளை பலியெடுத்து 200இற்கும் மேற்பட்ட மாணவிகளை படுகாயப்படுத்தியதுமான இந்தச் சம்பவம் இன்றும் தமிழர் மனங்களிலிருந்து அழிக்கப்பட முடியாத அளவிற்கு ஆழமாகப் பதிந்திருக்கிறது. விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகளுக்கான பயிற்சி முகாம் என்று அடையாளப்படுத்திய இடத்துக்கு உடனடியாகவே விரைந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி நிதியப் பிரதிநிதிகளும் (யுனிசெவ்)"அது புலிகளின் பயிற்சி முகாமல்ல.மாணவிகளுக்கான் தலைமைத்துவ பயிற்சி நடந்த இடம் தான்"என்று உண்மையை உலகுக்கு சொல்லினர்.

முகமாலையில் முன்னேறிய படைகள் மீது மரண அடி கொடுத்து சுமார் 75 சடலங்களை அரசுக்கு பரிசாக அளித்த புலிகள் மீது வீரத்தைக் காட்ட முடியாத அரசு ,குழந்தைகள் மீது அதைக் காட்டி தன் இழப்பை ஈடு செய்ய விளைந்ததன் விளைவே இந்தத் தாக்குதல். இந்தப் பகுதி அப்பாவிக் குழந்தைகளை பராமரிக்கும் செஞ்சோலை வளாகம் என்பது இலங்கை அரசுக்கு நன்றாகத் தெரியும். அத்துடன் தாக்குதல் நடைபெற்ற வள்ளிபுனத்தில் தான் ஐக்கிய நாடுகள் சபையின் பல அலுவலகங்களும் இருந்தன. எனவே இந்த இடத்தில் ஒரு போதும் புலிகள் பயிற்சி முகாமை அமைக்க மாட்டார்கள் என்பது சிறுகுழந்தைக்குக் கூட தெரியும். எனவே திட்டமிட்டே குழந்தைகள் மீது இந்தக் கொடூரத்தை இலங்கை அரசு அரங்கேற்றியிருந்தது.

இன்றைக்கும் காஸாவில் இஸ்ரேலியப் படைகள் தங்கள் இழப்பை ஈடுசெய்ய பீரங்கிகளின் சுடுகலன்களை குழந்தைகளை நோக்கியே திருப்புகின்றன.செஞ்சோலையில் மட்டுமல்ல. உலகெங்கும் அதிகாரம் தன் இயலாமையை குழந்தைகள் மீது தான் காட்டுகிறது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிரைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஓகஸ்ட் 13 ஆம் திகதி வெளியிடப்பட்டது.